உ

சிவமயம்

# அருள்மிகு பொன்னாலை
# சித்தி விநாயகர் ஆலயம்



# மஹா கும்பாபிஷேக மலர்

**21.08.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அருள்மிகு பொன்னாலை
# சித்தி விநாயகர் ஆலயம்



# மஹா கும்பாபிஷேக மலர்

## 21.08.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலய முன்தோற்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்தானம் - திருப்பணிக்கு முன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

...... ...... 20........

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி

திருஞானசம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சிவனேயச் செல்வர்களே! பொன்னாலையில் எழுந்தருளியிருந்து அருள் வழங்கிவரும் சித்தி விநாயகப் பெருமான் கும்பாபிஷேக மலருக்கு அருளாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ஆலயப் பூசகரும் அன்பர்களும் திருப்பணியாளர்களும் விநாயகப் பெருமான் திருவருள் அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் செயற்பட்டு வருவது எங்கும் மங்களம் பொங்கச் செய்யும் அரும் செயலாகும்.

ஆலய வரலாறு, அன்பர்கள் அனுபவம், சைவ சமய உண்மைகள் என்பவற்றைக் கொண்டிருக்கும். கும்பாபிஷேக மலர் அனைவருக்கும் பயன்தர வேண்டும் என்னும் விருப்பத்துடன் எமது அருளாசியைத் தெரிவித்து அமைகின்றோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**யாழ்ப்பாணம்.**

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள்**
ஸ்ரீ சக்தி கிரியா குருமணி
*பிரதம குரு*
*சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம்,*
*வரணி, இலங்கை.*
தொ.பே : 077 1726688



Sivasri R.Kumaraswamy Kurukkal
Sri shakthi kriya Kurumani,
*Chief Guiest,*
*Suddypuram Amman Thevasthanam*
*Varani, Sri Lanka*

திகதி ......../......../201.....

# ஆசிச் செய்தி

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்"

"பரதத்துவத்தைக் கல்லாத மனத்தினை உடைய அற்பனை, எனது அருள்பித்தைக் கிளப்பி, கல்போன்ற என் மனத்தைக் கனியாகப் பக்குவப் படுத்தி, தனது கருணைக் கடலில் என்னை மூழ்கச் செய்து என் வினையை அகற்றிய பரம ஞானியைப் பாடுவோம்" என்னும் மணிவாசகரின் தேன் கலந்த மணிவார்த்தைகளுக்கிணங்க, தன் அருளைச் சொரிந்து தனது தாள்களை வணங்கத் திருவருள் செய்பவன் ஈசன்.

சர்வமும் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை வழிபடுவ-தற்கும் பக்தி செலுத்துவதற்கும் ஏதுவாக விளங்குவது திருக்கோவில் களாகும். "சிவபூமி" என்று திருமூலரால் போற்றப்பட்ட எமது இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்து வரலாற்றுச் சிறப்புடன் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் சிறப்புக்களும் ஒருங்கே அமையப்பெற்று இயற்கை எழில் கொஞ்சும் ஆலயமாக, பொன்னாலை சித்தி விநாயகர் ஆலயம் திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனின்றி ஒரு அணுவும் அசையாது" என்னும் வார்த்தைகளுக்கு அமைவாக விநாயகப் பெருமானின் திருவருளால் பெருமானது குடமுழுக்கு விழாவானது சிறப்பாக நிறைவடைந்துள்ளதோடு தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேக பூர்த்தியையொட்டி கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றோம். எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளுடன் இப்பணியைச் சிறப்பாக நடாத்திய அனைவருக்கும் மற்றும் எம்பெருமானின் அடியார்களுக்கும் இறைவனது நல்லாசிகள் கிடைக்க வாழ்த்தி அமைகின்றேன்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**

**சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள்,**
**ஸ்ரீ சக்தி கிரியா குருமணி**
**பிரதம குரு**
**சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம்,**
**வரணி, இலங்கை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீராம ஜெயம்
Srirama Jeyam
வேதாகமகிரியா கலாபூஷணம் பிரதிஷ்டா கிரியாபானு
ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ. க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்
பிரதமகுரு. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
Vedakama Kiriya Kalapusanam, Pirathisda Kiriyabanu
Sri Vishnu Sri K.S. Somaaskanthakurukkal
*Chief Priest, Ponnalai Sri Varatharajapperumal Thevasthanam*

Ponnalai,
Chulipuram.

## ஆசிச் செய்தி

விநாயகப் பெருமான் அடியார்களே!

சிவபூமியாம் ஈழத்திருநாட்டின் சிரசென விளங்கும் வளமும் சூழ்ந்த நெல் வயல்களுக்கு மத்தியிலே பொன்னாலை எனும் பதியிலே அமர்ந்து சகல ஆத்மாக்களுக்கும் எத்தகைய இடையூறுகளையும் நீக்கி எமது கருமங்களை இனிதே அனுகூலமாக்குபவர், எண்ணிய கருமங்களை எல்லாம் எளிதில் முற்றுற, விநாயகனை வேண்டுகின்றோம்.

பொன்னாலைப் பதியிலே ஸ்ரீ வரதராஜப் பெருமாளைத் தரிசித்து வருபவர்கள் முன்னதாக உள்ள திரிதள இராஜகோபுரங்கள் அமையப் பெற்ற, சிறப்பான முறையில் வர்ணங்கள் தீட்டி அழகான முறையில் அமையப் பெற்ற, முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானைத் தரிசித்தே பின்னர் தான் பெருமாளைத் தரிசிக்க வருவர். உலக நாட்டின் இக்கட்டான சூழ்நிலையிலும் நித்திய நைமித்திய கிரியைகள் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஆலயத்தில் திருவருளோடு குருவருளாகிய அர்ச்சகர் அவர்களின் சிறப்புப் பணியால் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 21.08.2020 வெள்ளிக்கிழமை நிகழவிருப்பது மகிழ்ச்சிக் குரிய விடயமாகும்.

கும்பாபிஷேகத்தில் பங்குகொண்டு திருப்பணி செய்த அடியார்கள், தொண்டர்கள் கும்பாபிஷேகத்தை நினைவுபடுத்தும் ஓர் மலர் வெளி இடுவது காலத்தின் தேவை. அது இந்த ஆலயத்தின் வரலாற்றைத் தாங்கி வருவது ஒரு வரலாற்றுப் பொக்கிஷம், இது சிறப்புற அமைய எல்லாம் வல்ல வரதராஜப் பெருமாளின் திருவருளோடு, விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பொன்னாலை கலசெட்டியவத்தை ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் திருப் பொன்னூஞ்சல்

## காப்பு

உலகமெலாம் நிறைந்தவனே ஓங்காரத்தின்
உட்பொருளே உமைமகனே நாதவிந்து
கலைவடிவே குளக்கோட்டன் ஏழாம்வீதி
கதித்தோங்கும் கோபுரவா யிலின்கண்வைத்து
நிலைபெறுமா றனுதினமும் பரவநின்ற
நின்மலனே மாயவனார் உரைப்பொன்னாலை
கலசெட்டிய வத்தைவாழ் கணேசாநின்றன்
கவினூஞ்சல் பாடஅருள் காப்பதாமே

## நூல்

அகரமுத லட்சரங்கள் அனைத்துமாகி
அணிசுருதி ஆகமங்கள் தத்துவங்கள்
பகருமுயர் புராணங்கள் விளக்குகின்ற
பரம்பொருளாய், ஆதார மூலம்தோன்றி
சகஸ்ரதள கமலமிசைச் சுடராய்நின்ற
தற்பரனே வாக்குமனா தீதநாதா
செகம்புகழ்பொன் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல். 1

தங்கியநான் மறைக்கள்நெடுந் தூண்களாக
தருவுசிவா கமங்கள்மணி நாண்களாக
துங்ககலைப் புராணங்கள் விட்டமாக
சுவைத்ததிரு முறைகள்பரி வட்டமாக
பொங்குசுடர்ப் பிரணவமே பீடமாக
புனிதஉப நிடதங்கள் மாடமாக
தெங்குயர்பொன் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருதியொடு மதிதரளக் கவிதைதாங்க
பரவுமிரு சுரமகளிர் கவரிஓங்க
பரமசிவன் பார்வதித்தாய் மாலைசூட்ட
பங்கயனும் கலைமகளும் அழகு கூட்ட
திருமாலும் பூமாதும் விருதுநோக்க
தேவர்குழு முறைநின்று வடந்தொட்டரட்ட
தெருளுயர்பொன் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 3

ஓங்குகோ புரக்கலசம் வாயுவாலே
உயர்ந்துசென்று மறைந்ததனைக் காணாதேங்கிப்
பூங்கமலக் குளத்திருக்கக் கண்டெடுத்துப்
புகுகலச மெட்டியவத் தைப்பேரிட்டுத்
தாங்குநினைப் பூசிக்கக் கருணைசெய்த
தந்திமுக நாயகனே செந்நெல்வாவி
தேங்கியபொன் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 4

சொல்விளங்கு மிராவணன் கொணர்ந்தலிங்கம்
தூயகோ கார்ணமென அமைத்த செல்வா
நல்விரத வல்லாளன் தனையாட்கொண்ட
நாயகனே வல்லபையின் நாதாவெள்ளை
வெல்விடையோன் தேரிறுத்த விக்னராஜா
வேண்டுமடி யார்துயரம் தீர்ப்பதற்காய்ச்
செல்வமுயர் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளும் பொன்னாலை வரதராஜன்
பதமலரின் திருவருளை பெறுவோர்க்கெல்லாம்
நேராக முன்னின்று நெறிப்படுத்தும்
நெடுந்தும்பிக் கையானே மருது கொன்றை
தாராரும் வில்வைவளர் அறுகம்பூமித்
தலமிருந்து கருணைமழை புரியும்கொம்பா,
தேரோடும் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 6

அவம்புரிந்த கஜாசுரனைப் போரில்வேகம்
அடக்கிமூ ஷிகமாக்கி வந்துகண்ணன்
தவம்புரிந்த சட்டியிலே சாபம்நீத்த
சச்சிதா நந்தகுரு மணியேதொண்டர்
பவம்புரிந்த பழங்கணக்கை அழித்துவேறு
பரத்துவமா கணக்கெழுதும் மருப்பினானே
சிவம்சிறந்த கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 7

மிகுதவத்து முற்கலநின் கண்நோக்காலே
விப்பிரதன் புருசுண்டி முனிவனாகித்
தகுதிபெறக் கற்பகத்தைத் தந்தாய்அப்பா
தமிழ்க்கிழவி ஔவைக்குக் கயிலைகாட்டும்
விகடசக் கரக்கூத்தா நின்தாள்நெஞ்சில்
விலகாத வரந்தந்து காத்தருள்வாய்
திகழ்பழன கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தனுறு பசிதீர்க்கு முதியோனாகிப்
பருகுதற்கு நன்னீரும் உணவும்ஈந்தாய்
மெத்துகமம் வாடுதென வேண்டல் செய்ய
மிகுமாரி வழங்கிமனக் கவலைதீர்த்தாய்
புத்தியிலாச் சிறுபாலன் பேசவைத்தாய்
பூமகள் மருமகனே புகழ்படைத்த
சித்திரப்பொன் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 9

செங்கோலச் சடையுடனே மகுடமாட
திருக்குழைசேர் முறத்செவிகள் ஆடசோதி
வங்கார மாலைகளும் நூலுமாட
மணிவயிற்றுப் பட்டா மறைமுழங்கும்
சங்கீதச் சிலம்பாட கழல்களாட
தருணவரம் தருக்கரங்க ளாட, தெய்வச்
சிங்காரக் கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 10

நான்பெருகு மலமறுப்பீர் ஆடீரூஞ்சல்
நல்லடியார் பிழைபொறுப்பீர் ஆடீரூஞ்சல்
ஊன்பெருகு வினைதணிப்பீர் ஆடீரூஞ்சல்
ஊறுவரா தெமையணைப்பீர் ஆடீரூஞ்சல்
வான்பெருகு மறைவரைந்தீர் ஆடீரூஞ்சல்
மண்டலமெல் லாம்நிறைந்தீர் ஆடீரூஞ்சல்
தேன்பெருகு கலசெட்டிய வத்தைமேவும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீரூஞ்சல் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழி**

பொன்பெருகும் ஆழிவலம் சூழ்பொன்னாலை
பொருந்துகல செட்டியவத் தைத்தலம்வாழ்
முன்பெருகு சித்திவிநா யகர்தாள்வாழி
முதியதமிழ் வாழி பசுச் செல்வம்வாழி
இன்பசிவ நெறிவாழி மறையோர்வாழி
இனியதிரு முறைவாழி நீதிவாழி
அன்புமிகு வளம்பெருகி அடியார்வாழி
அறிவாளர் வாழி மழை வாழிவாழி

**மங்களம்**

ஆதிசித்தி விநாயகர்க்கு மங்களம் மங்களம்
அம்பிகை மகேசனுக்கு மங்களம் மங்களம்
ஊதுகுழல் கிருஷ்ணனுக்கு மங்களம் மங்களம்
ஓங்கார வேலனுக்கு மங்களம் மங்களம்
வேதவாணி இலட்சுமிக்கு மங்களம் மங்களம்
வீரசூல வைரவர்க்கு மங்களம் மங்களம்
ஓதுதெய்வம் யாவருக்கும் மங்களம் மங்களம்
உணரடியார் தொண்டருக்கு மங்களம் மங்களம்

**ஆக்கியோன்,**
**கவியோகி அருட்கவி**
**சீ.விநாசித்தம்பி M.A**
**நாகேஸ்வரம், அளவெட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலைப் பிள்ளையார் கோவில் தலவரலாறு – நான் அறிந்தவை மூலம்

எனக்கு இரண்டு மூன்று வயதான காலத்தில் ஒருமுறை நம் கோவிலில் களவு போனது. மூலஸ்தானப் பிள்ளையாரைப் புரட்டி யந்திரத்தைக் களவாடிவிட்ட னர். இதனால் எனது தந்தையாரும் பேரனாரும் மிகவும் பாதிக்கப்பட்டனர். களவு போனது பெரும் வேதனை. களவின் பின் செயற்பட வேண்டிய தகுதி யின்மை. இவற்றால் தமது ஆதாரம் அனைத்தையும் பறிகொடுத்த நிலை யில் புலம்பிக் கொண்டிருந்தனர்.

அவ்வேளை நம்மூரில் மிகப் பணக்காரராக இருந்தவரும், தன் செல்வ நிலைக்குப் பிள்ளையாரின் கருணையே காரணம் என்பதை ஒரு சாத்திரம் சொல்பவர் மூலம் அறிந்திருந்தவரும் “எம்பெருமான்” என்று பலராலும் அழைக்கப்பெற்றவரும் கதிரவேற்பிள்ளை என்ற பெயருடையவருமான அன்பர் அப்பாவும் பேரனாரும் இருந்த இடத்துக்குச் சென்று, கோவிலில் களவு போனால் இப்படி அழுது கொண்டிருக்கலாகாது. பிறபிற கோவில் களில் களவு போனால் அதன்பின் எப்படிச் செயற்படுவார்களோ அப்படிச் செயற்படுவதுதான் முறை என்று கூறி அப்பாவை வழக்கம்பரையிலிருந்த வேதாரணியக் குருக்கள்மாரிடம் அழைத்துச் சென்று, சாந்தி - கும்பாபி ஷேகம் போன்றவற்றைத் தன் செலவிலேயே நடத்திவைத்தார். அப்போது வேதாரணியம் சைவக் குருமார் எம்பெருமானைப் பார்த்து “நீர் வசதியாக இருக்கிறீர் ஆனால் கோவில் வசதியாக இல்லை. எனவே நித்திய பூசைக்கு வசதி செய்யும்” என்று கூறியிருக்கின்றனர். உடனே எம்பெருமான் திரு கோணமலையில் கந்தளாய்ப் பகுதியிலிருந்த தன் கமத்தில் ஒரு பகுதியை பிள்ளையாருக்கு உரியதாக்கி, வருடத்தில் 6 மூடை = பதினெட்டுப் புசல் நெல் கோவிலுக்குக் கிடைக்கச் செய்தார். அவர் இருக்கும்வரை அந்த நெல் வருடம் ஒருமுறை வந்து கொண்டிருந்தது. பின் அது தடைப்பட்டது. அந்தக் காணியை இலங்கைப் படையினர் தமக்கு விளையாட்டிடமாகப் பிடித்துவிட்டனர் என்று கேள்விப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த எம்பெருமானின் மூத்த பெண்பிள்ளைக்கு இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் ஆண் பிள்ளையை விரும்பிய போது நாகசாந்தி செய்வதுடன் முருகனைப் பிரதிட்டை செய்வது அவசியம் எனச் சோதிடர்கள் மூலம் அறிந்து எங்கள் பிள்ளையார் கோவிலிலேயே முருகனுக்கு கோவில் கட்ட விரும்பினர். ஆரம்பத்தில் பிள்ளையார் கோவிலே போதும் முருகன் கோவில் எதற்கு என எண்ணிய பெத்தப்பா, தன் இளமைக் காலத்தில் எங்கள் பிள்ளையார் கோவிலில் ஒரு முருக யந்திரம் இருந்து சிதைந்ததால் முருகன் கோவில் கட்டுவதை வரவேற்றார். இந்நிலையில் எங்கள் பிள்ளையார் கோவிலிலே தெற்கு வா சல் "சபை"யாக முருகன் கோவில் கட்டப்பட்டது. பிள்ளையார கோவிலின் பிற பகுதிகள் பெத்தப்பாவின் சீதனக் காணியை விற்றும், அன்பர்களின் உதவியுடனும் அமைக்கப்பட்டவை. முருகன் கோவில் எம் பெருமானின் மருமகன் இரத்தினசபாபதியின் தனிப்பட்ட உபயமாக அமைந்தது. இம் முருகன் கோவில் கும்பாபிஷேகத்தின் பின் அவர்களுக்கு ஒரு ஆண் பிள்ளை பிறந்தது. அப்பிள்ளைக்குக் 'குகதாசன்' என்றே பெயரிட்டிருந்தனர். இந்த வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால் வம்சவிருத்திக்காக ஆண் பிள்ளை வரத்தை அருள்பவர் எங்கள் கோவில் முருகப்பெருமான் என்று தெரிகின்றது.

எங்கள் கோவிலில் ஞானசக்தி, வேல் வடிவிலேயே முருகப்பெருமான் இருக்கிறார். இவ் வெம்பெருமானுக்கு ஒரு வெள்ளிக் கவசம் உள்ளது. இக்கவசம் சித்தப்பா (முத்துக்குமாரன்)வின் முதல் மாதச் சம்பளத்தால் உருவாக்கப்பட்டது என்பதை அறிய முடிந்தது.

சுமார் 65 வருடங்களுக்கு முன் மூலத்தானப் பிள்ளையாரின் ஒரு கை - (தந்தத்தை வைத்திருக்கும் வலக்கை) பின்னப்பட்டது. அதனால் அம் மூர்த்தியை மாற்றி புது மூர்த்தி வைக்க வேண்டும் என்ற நிலை உருவானது. அக்காலகட்டத்தில் சித்தப்பா ஆத்மார்த்த பூசை வழிபாட்டுக்கென திருமுருக கிருபானந்தவாரியார் மூலம் அழகிய சிறிய பிள்ளையாரை யும் முருகப் பெருமானையும் வாங்கியிருந்தார். அந்தப் பிள்ளையாரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த அப்பா அந்த மூர்த்திகளைச் செய்த ஆசாரிமார்களைக் கொண்டே கிருபானந்தவாரியார் மூலம் பிள்ளையாரை அமைக்கச் செயற்பட்டார். பழைய பிள்ளையாரின் அளவைக் கொடுத்துப் பிள்ளையார் செய்யச் சொன்ன போது அந்த ஆசாரி கோவிலின் அளவை வைத்துச் செய்வதே பொருந்தும் என்று தெரிவித்து கோவிலின் அளவைப் பெற்று முன்பிருந்த திலும் பார்க்கப் பெரிய பிள்ளையாராகச் செய்தார்.

இப்பிள்ளையார் செய்த காலத்தில், அப்பா கோவளம் பேப்பர் சுவாமியா ரிடம் தொடர்புடையவராக இருந்திருக்கிறார். சாமியாரிடம் இருந்த எட்டி யாந்தோட்டை கணேசன் என்பவருக்கும் அப்பாவுக்கும் இருந்த நட்பி னாலும் எட்டியாந்தோட்டை கணேசனின் பொருளாதார வசதியாலும் புதிய பிள்ளையார் செய்யத் தேவைப்படும் பணத்தை உதவும்படி அப்பா சொல்ல அவரும் சம்மதித்திருக்கிறார். பின்னர் இவ் விடயத்தைச் சாமி யாருக்குத் தெரிவித்தபோது அப்படி அவர் செய்வதற்குச் சம்மதித்த தோடு, பிள்ளையாருக்குரிய யந்திரத்தைத் தானே பூசித்துத் தரவும் சாமி யார் சம்மதித்திருக்கிறார். உரிய காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த பிள்ளையாரையும் யந்திரத்தையும் சாமியார் பூசித்து வழங்கியிருக்கிறார்.

அச் சந்தர்ப்பத்தில் கும்பாபிஷேகச் செலவையும் கணேசன் ஏற்றுக் கொள்வது என்ற விருப்பம் கணேசனுக்கும் சாமியாருக்கும் உண்டானது. ஆனால் அப்பா எம்பெருமானுக்கும் கோவிலுக்கும் உள்ள தொடர்பைக் கூறி எம்பெருமான் கும்பாபி ஷேகம் செய்யும் விருப்பத்துடன் இருப்பதால் அவரைத் தடுக்க இயலாது என்பதைத் தெரிவிக்க, அக் கும்பாபிஷேகம் எம்பெருமானின் உபயமாகவும் கணேசனின் பங்களிப்புடனும் நடந்திருக் கிறது. அப்போது சாமியார் பிள்ளையாருக்குத் தினமும் பாலா பிஷேகம் செய்ய வேண்டுமென்று கூறி காரைநகர் வைத்தியநாதன் மாஸ்ட்டரைப் பாலுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கத் தூண்டினார். பிள்ளையா ரின் பாலாபி ஷேகத்திற்கு உதவ வந்த மாஸ்டர் பால் செலவுக்கு மேலதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமாகவே பணம் உதவியதால் மாஸ்டரின் பணம் கோவிலின் எல்லாச் செலவுகளிலும் இடம் பெற்றது என அப்பா கூறக் கேட்டிருக்கிறேன்.

எங்கள் கோவிலில் சிறியதும் அளவானதுமாக இரண்டு உற்சவ மூர்த்திகள் உண்டு. சிறிய உற்சவமூர்த்தி அக்காலத்தில் வேறு கோவில் திருவிழாக்களுக்கும் உரியதாக இருந்ததாகவும் அக் கோவில்களில் உற்சவமூர்த்திகள் செய்ததால் அவர் எங்கள் கோவி லில் இருந்துவிட்டதாகவும் அப்பா கூறக் கேட்டிருக்கிறேன்.

பின்னால் புதிய உற்சவ மூர்த்தி வாங்கும் சந்தர்ப்பத்தில் புறோக்கர் சின் னையாவின் தந்தை மிளகாய் விற்று வைத்திருந்த 600/- ரூபாவைக் கொடுக்க, அத்துடன் மேலும் 25 அல்லது 50 ரூபா கொடுத்து புதிய உற்சவ மூர்த்தியைப் பெத்தப்பா வாங்கியதாகவும், புதிய உற்சவ மூர்த்திக்கு புறோக்கர் சின்னையாவின் தகப்பன் பெருந்தொகை பணத்தைக் கொடுத்ததற்காகப் பிள்ளையார் திருவிழாவை (பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் கொடியேற்றத்துக்கு முதல் நாள் பிள்ளையார் பொன்னாலைக் கோவிலுக்குப் போகும் திருவிழா அவர்களைச் செய்ய ஒழுங்கு செய்ததாகவும் அறிந்தேன்.

என் தங்கை வடிவுக்கும் எங்கள் பூந்தோட்டத்துக்கும் ஒரு வயது எனப் பெத்தப்பா கூறக் கேட்டிருக்கிறேன். நாங்கள் வடிவை ஏதாவது சந்தர்ப்பத் தில் கண்டித்து அழுவித்தால் உடனே பெத்தப்பா 'வடிவு அம்மாவின் வயிற்றில் வந்தவுடன் தான் பூந்தோட்டம் வந்தது. அவள்தான் பூந் தோட்டத்தைக் கொணர்ந்தவள் அவளை அழுவிக்க வேண்டாம்' என்று கூறுவார். பூந் தோட்டம் உருவாக மூளாய் சின்னத்தம்பிச் சாமி யார் பெரும் காரணமாக இருந்திருக்கிறார். தனக்குத் தெரிந்த ஊரவர்க ளான மாட்டு வண்டில்க்காரரிடம் சென்று பூந்தோட்டம் அமைதற்காகுமளவு மண்ணைத் தோண்டிப் பறியுங்கள் என்று சொல்ல வண்டில் காரர் எங்கே மண்ணைப் பறிப்பது என்று கேட்கத் தொடங்கித்தான் பூந்தோட்டம் ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி ஆரம்பிக்கும்போதே செங்கழுநீரத் தொட்டி அமைக்கும் அவசியத்தை ஆனைக்கோட்டைக் கதிர்காமு என்னும் தோட்ட அபிமானி தூண்டினார். அவ்வேளையில் பொன்னாலையைச் சேர்ந்தவரும், திருகோண மலையில் சோடாக் கொம்பனி முதலிய தொழிலைச் செய்த வருமான அன்னம் பிள்ளை மகன் கந்தசாமி கோவிலுக்கு வந்தபோது, செங்கழுநீர்த் தொட்டி அமைப்பதற்கான செலவையும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். ஆரம்பத்தில் கிளுவை நட்டு ஓலையால் வேலி அமைத்து ஆரம்பித்த பூந்தோட்டம் பின் படிப்படியாக வளர்ச்சி பெற்றது.

இன்றைக்கு சுமார் 18-20 வருடங்களுக்கு முன் இவ்வாலயத்தில் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. பொன்னாலையைச் சேர்ந்த மாதகல் சண்முகம், நெல்லியான் செல்வம், பொன்னாலை இரத்தினம் முதலியவர்களின் ஊக்கத்தால் திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் வருடம் அலங்காரத் திருவிழாவாக நடை பெற்றுப் பின்னர் கொடியேற்றத் திருவிழாவாக நிகழ்கின்றது.

2016ஆம் ஆண்டு சீரடி பாபா பக்தரும் மருமகனுமான ஜெகதீசன் ஆர்வத்தால் எங்கள் கோவிலில் சீரடிபாபாவை வைத்து வழிபடப்பட்டு வருகிறது. வட இந்தியாவில் நீண்ட காலமாக இருந்த சைவ - முஸ்லீம் பிணக்குகளைப் போக்கி இரு சமூகமும் ஒற்றுமையாக வாழவெனப் பல அருளாளர்கள் செயற்பட்டிருக்கிறார்கள். அவர்களில் கபீர்தாஸும் சீரடி பாபாவும் குறிப் பிடத்தக்கவர்கள்.

சீரடி பாபா தன்னுடைய நோக்கத்துக்கு ஏற்ப சைவ அபிமானியாகவும் முஸ்லீம் அபிமானியாகவும் இருந்திருக்கிறார். அவர் காலத்தில் அவருடன் வாழ்ந்த “மெகா” என்பவர் முழுமையான சிவபக்தர். அந்தணர். முஸ்லீம் அபிமானியான இவரிடம் செல்லலாமா எனக்கருதியவர், இவரோடு பழகியபின் இவரே சிவபெருமான் என்று வணங்கியவர். சீரடி பாபாவை வணங்கும் சம்பிரதாயத்தையும் உண்டாக்கியவர். இவருக்குச் சீரடி பாபா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 12 அங்குல உயரமுள்ள கருங்கல்லிலான சிவலிங்கத்தை வழங்கி யிருக்கிறார். அந்த லிங்கம் சீரடி ஆலயத்தில் இன்றும் உள்ளது. சிவ வழிபாட்டைத் தூண்டியது போலவே சீரடி பாபா விஷ்ணு வழிபாட்டையும் தூண்டியிருக்கிறார். விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம், பகவத் கீதை பாராயணங்களையும் நன்கு ஊக்குவித்திருக்கிறார். இந்தியாவில், தமிழ் நாட்டில், இலங்கையில், பெருந்தொகையான சைவ மக்கள் சீரடி பாபா வழிபாட்டைச் செய்கிறார்கள். மிகப்பல பாபா ஆலயங்கள் தோ-ன்றியுள்ளன. திருவண்ணாமலை மலைசுற்றும் பாதையிலே கூட இரு சீரடி பாபா ஆலயங்கள் உள்ளன. இப்படி வியாபகமான சீரடி பாபா வழிபாட்டைச் சைவ ஆலயங்களில் மேற்கொண்டால் புதிது புதிதாக சீரடி பாபா ஆலயங்கள் உண்டாகும் அவசியம் நீங்கும் என்ற அடிப்படை யில் எங்கள் ஆலயத்தில் பாபாவை வைத்து வழிபட ஜெகன் விரும்பிய போது சம்மதித்தேன். அப்படி வைக்கும்போது எங்கள் சமய அபி மானிகள் விரும்பாவிட்டால் அவரை வேறெங்கு வைக்கலாம் என்று கருதினேன். நாற்பது நாளுக்குள் - மூன்று மாதத்துக்குள் எதிர்ப்பு அபிப்பிராயம் வந்தால் ஏற்கலாம் என்பது ஒரு கோட்பாடு. நான்கு வருடமாக வரவேற்பே பல வடிவங்களில் இருந்ததால் அவருக்கென ஒரு தனி இடம் வகுக்கும் சூழ்நிலை உருவானது.

பிள்ளையாருக்குச் சதுர்த்தி செய்வது போல் அவருக்கு வியாழக்கிழமை வழி பாட்டைச் செய்ய ஆரம்பித்தால் என்னால் கொண்டு நடத்த இயலாது என்ற அச்சத்தில் அவரவர் விருப்பம் போல் வழிபடலாம் என்ற வசதியை உண்டாக் கியுள்ளேன். இந்த விடயத்தில் ஒரு நுட்பம்:- சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியார் வணக்கமாகத் திருத் தொண்டத் தொகை அருளிய போது 63 தனி அடியார்களுடன் 9 தொகை அடியார்களையும் பாடி, அடியார் வணக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். 9 தொகை அடியார்களுள் "அப்பாலுமடிச் சார்ந் தார்" என்பது ஒன்று. இதுபற்றிச் சேக்கிழார் கூறும் போது சுந்தரமூர்த்தி நாய னார் காலத்துப் பிற்பட்டவர்களும் தமிழ்நாட்டுக்கு வெளியிலுள்ளவர்களும் ஆன அடியார்கள் அப்பாலுமடிச்சார்ந்தாருள் அடங்குவர் என்று குறித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியிருக்க நம் சைவமக்களிடையே 63 அடியார்கள் 4 சமயகுரவர் போன்ற வழிபாடு களே அருகிவரும் சிறுமை காணப்படுகிறது. இந்நிலை யில் சீரடி பாபாவை வழிபடுவது ஓர் அடியார் வழிபாடாக உள்ளது என்று ஆறுதல டைவதோடு பாபாவில் தொடங்கி, 63 தனியடியார், 9 தொகை அடியார், 4 சந்தானாச்சாரியார், இவர்களைத் தொடர்ந்து பட்டினத்தார், தாயுமானவர், ஆறுமுகநாவலர் என அடியார் வழிபாடு விரிவடைய, பாபா வழிபாடும் ஆரம்பமாகலாம்.

சில வருடங்களுக்கு முன்னர் இருபாலையில் ஒரு பிள்ளையார் கோவில் மணிக் கூட்டுக் கோபுரம் புதுப்பிக்க வேண்டிய நிலை உண்டானபோது மணிக் கோபுரத்திலிருந்த பெரிய மணியைக் கீழே இறக்கி வைத்து விட்டு மணிக்கோபுரத்தைப் புனரமைத் திருக்கிறார்கள். பெரிய மணியைக் கீழே இறக்கி வைத்தபின் அதனைப் பார்த்தால் அதில் "பொன்னாலை சிந்தாமணிப் பிள்ளையார் கோவில்" என்று இருந்திருக்கிறது. இதைக் கவனித்த ஆறுதிருமுருகன் ஒருமுறை என்னைச் சந்தித்தபோது உங்கள் பிள்ளையார் கோவில் பெயர் என்ன என்று கேட்டார். நான் பொன்னாலை சித்தி விநாயகர் கோவில் என்றேன். பொன்னாலையில் வேறு பிள்ளை யார் கோவில் இருக்கிறதா என்றார். இல்லை என்றேன். இருபாலைப் பிள்ளையார் கோவில் மணியில் "பொன்னாலை சிந்தாமணிப் பிள்ளை யார் கோவில்" என்று உள்ளது என்றார்.

போர்த்துக்கேயர் கோவிலை இடிக்குமுன் எங்கள் கோவில் சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் என்றிருந்திருக்குமோ என எண்ண வேண்டியுள்ளது. ஏனென்றால் குளக்கோட்டன் ஏழு வீதிகளுடன் வரதராசப் பெருமாள் கோவில் அமைத்த போது ஏழாவது வாயிலில் பிள்ளையார் கோவில் இருந்ததை ஒட்டியே இப்பிள்ளையார் கோவில் உண்டானது. ஆனால் மூளாய்ப் பிள்ளையார் கோவிலிலும் அராலி நொச்சிக் காட்டுப்பிள்ளை யார் கோவிலிலும் உள்ள பிள்ளையார்கள் பொன்னாலைக் கோவிலில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டதாக மூளாயிலும் அராலியிலும் கூறிக் கொள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். ஆனால் பொன்னாலையில் இரண்டு பிள்ளையார் கோவில் இருந்ததாகக் அறியப்படவில்லை. வரதராசப் பெருமாள் கோவிலுக்கு முன் ஒரு பிள்ளையார் கோவில் இருந்ததாகவே அறியப்படுகின்றது.

ஆனால் சமீபத்தில் பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் கொடித்தம்பத்தடியில் ஒரு பிள்ளையாரை வைத்திருக்கிறார்கள். இது மட்டுமன்றி ஆதியில் பெரிய கோவில் இல்லாது பிள்ளையாரை வைத் திருக்கிற வழக்கம் இருந்ததென்பதற்கு தமிழ் நாட்டில் பல கோவில்கள் சான்றாக உள்ளன.

இந்த அடிப்படையில் பொன்னாலையில் ஆதியில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்த தென்றும் அது சிந்தாமணிப் பிள்ளையார் என்று இருந்த தென்றும் பின்னர் சிந்தாமணி என்ற இடத்தில் சித்தி என்று வந்திருக்க லாம் என்றும் எண்ண வேண்டியுள்ளது.

பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவிலில் மணிக்கூட்டுக் கோபுரம் சமீபத்தில் பூர்த்தியாக்கப்பட்டு அதில் பெரிய மணி ஏற்றி வைக்கப்பட்டது. அதற்கு முன் பெரிய மணி மண்டபத்தில் ஆறு அடியுள்ள இரண்டு தூண் களில் தொங்கவிடப்பட்டிருந்தது. ஆனால் எனக்குத் தெரியாத காலத்தி லேயே, 70-80 வருடங் களுக்கு முன்பே எங்கள் பிள்ளையார் கோவிலில் மணிக்கூட்டுக் கோபுரம் உள்ளது. அக் காலத்தில் மணிக்கூட்டுக் கோபுரம் உபயம் செய்தவர் பெயரும் கோபுரத்தில் இருந்தது. சுண்ணாம்புச் சுவர் உளுத்துக் கொட்டியதால் பெயர் மறைந்துவிட்டது.

எப்படியானாலும் எங்கள் பிள்ளையாருக்குப் பெரிய மணியில் அக்கறை இருந்தது தெளிவாகின்றது. இத் தன்மை ஆதியில் இருந்ததால்தான் இருபாலை மணியில் பொன்னாலைப் பிள்ளையார் இருக்கிறார். அந்தப் பெரிய மணி இன்றைக்கும் என்றைக்கும் இருபாலைப் பிள்ளையாருக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியதாயிருக்கும் வேளையில் அம்மணியின் படத்தை எடுத்து எங்கள் கோவிலில் வைக்க வேண்டும் என்றும், எங்கள் பிள்ளையார் அக்காலத்தில் சிந்தாமணிப் பிள்ளையார் என்ற பெயரில் இருந்தார் என்பதை நம்புவது நம் கடமை எனக் கருதுகின்றேன். எங்கள் கோவிலை கலசெட்டியவத்தை சித்தி விநாயகர் என்பதும் கலசெட்டியவத்தை என்பது டச்சுக்காரர் காலத் திய தோம்புகளில் பதியப்பட்ட நிலப்பெயர் என்பதும் நம்பப்படுகின்றது.

ஆனால் வாக்குச் சொல்லும் சித்தி பெற்றுப் புகழும் பெருமையும் பெற்ற அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பி யவர்களைக் கொண்டு ஊஞ்சல் பாட்டுப் பாடிய போது கலசெட்டியவத்தை என்ற சொல்லைச் சிந்தித்து ஏழாம் வீதிக் கோபுரத்திலுள்ள கலசங்கள், முன்னுள்ள தாமரைக் குளத் தில் வீழ்ந்து மறைந்து தேட முடியாமல் கவலைப்பட்டபோது அவர்கள் கவலை தீரும்படி அக்கலசங்கள் கிடைக்க விநாயகப் பெருமான் அருளி யதால் கலசம் எட்டும்படி செய்தவர் என்ற கருத்தில் கலசெட்டியவத்தை என்னும் பெயருண்டானதாக அவர் ஊஞ்சல் பாட்டில் பாடியிருக்கிறார்.

எனக்கு 2 அல்லது 3 வயதாயிருந்தபோது, கோவிலில் களவு போனபோது அப்பாவும் பெத்தம்மாவும் துன்புற்ற வேளையில் எம்பெருமான் எனும் கதிரவேற்பிள்ளை தானாகவே அப்பா பெத்தப்பாவிடம் சென்று ஆக வேண்டிய கருமங்களைச் செய்தது போல இப்பவும் ஒரு நிகழ்ச்சி :-

எங்கள் கோவிலில் மூலஸ்தானத்தில் அடைமழை வேளையில் இரண்டு இடத்தில் மழைநீர் கொட்டும். அதைத் திருத்திக் கும்பாபிஷேகம் செய்யவென என்னிடம் 5 இலட்சம் உண்டு. ஆனால் அதைப் பொறுப்பாகச் செய்ய என்னால் இயலாது நீ செய் என்று மருமகன் ஜகனிடம் சொன் னேன். அவரோ இதற்கு 20 லட்சம் இல்லாமல் செயற்பட இயலாது என்றார். இதைக் கேட்ட நான் திருத்தம் கும்பாபிஷேகம் நடக்கிற நேரம் நடக் கட்டும் என்று அமைதியானேன். ஆனால் சிலரிடம் இந்த நிகழ்ச்சியை நட்பு முறையில் கூறியிருக்கின்றேன். இப்படிக் கூறியவர்களுள் ஒருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பாவின் மகன் என்பதை நான் மறந்து விட்டேன். ஆனால் அவர் அதை மறவாமல் சிந்தித்துத் தான் திருப்பணி வேலை செய்வதாக முன்வந்து பண்டிகை,- மடப்பள்ளி, மகா மண்டபம், உள்வீதி நிலத்திருத்தம் என்பவற்றை செய்துள்ளார். இப்படி இவர் செய்ததும் எம் பெருமான் செயல் போலப் பிள்ளையாரின் தூண்டுதலே என்றும் சுமார் 70 வருடங் களுக்கு முன் நடந்தது போல் இப்பவும் நடக்கிறது என்றும் பிள்ளையார் கருணையைக் காண்கின்றேன்.

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்**



வெற்றிகள் தோல்விக்கான விதைகளைக் கொணராத படி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நன்றி மறவாதவர் மகிழ்ச்சியாக இருப்பர்.

பகையைத் தீர்ப்பது நட்பு ஒன்றே.

செய்த பாவங்களைப் பிறரிடம் கூறுவதால் பாவச் சுமை குறையும்.

தினசரி வாழ்வின் கருணையாய் இருந்தால் தெய்வீகத்தை அனுபவிக்கலாம்.

உண்மையாய் இருப்பவருக்குத் தன்னடக்கம் வரும்.

நம் அறியாமையை அறிந்து கொண்டாலே அறிஞராகலாம்.

இரண்டு முயல்களைத் துரத்துவதனால் ஒன்றையும் பிடிக்க இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலைப் பிள்ளையார்

மன்னு கலசெட்டியவத்தை சித்தி விநாயகரை
உன்னியுற வணங்குவோமே

யாழ்ப்பாணப் பட்டணத்தில் இருந்து மானிப்பாய், சங்கானை, சித்தங்கேணி, பண்ணாகம், சுழிபுரம், தொல்புரம், மூளாய் வழியாக காரைநகருக்குப் பயணிப்போரும், யாழ்ப்பாணத்திலிருந்து நவாலி, சங்கரத்தை ஊடாக காரைநகருக்குப் பயணிப் போரும் மூளாய் பொன்னாலைச் சந்தியைக் கண்டுதான் அப்பாலே காரைநகருக்குப் போய்ச் சேர முடியும்.

மூளாய் பொன்னாலைச் சந்தியில் பொன்னாலை வீதியிலே இறங்கி நேரே மேற்குத் திசையாக சுமார் 800 மீற்றர் செல்லும் பொழுதே சற்றுத் தூரத்தில் உயர்ந்த கோபுரத்துடன் கம்பீரமாகப் பொன்னாலைப் பிள்ளையார் கோயில் தெரியும். பொன்னனாலைப் பிள்ளையாரை "கலசெட்டியவத்தைப் பிள்ளையார்" என்றும், "கலசெட்டியவத்தை சித்தி விநாயகர்" என்றும் "பறட்டையா குளத்துப் பிள்ளையார்" என்றும் சொல்வார்கள். தொடக்கத்தில் இந்தக் கோயில் திருவாளர் தியாகர் என்பவருக்குச் சொந்தமாய் இருந்தது. அவருக்கு நிறையப் பிள்ளைகள் பிறந்திருந்தாலும் மூன்று ஆண் பிள்ளைகள் மட்டும் தான் மனைவி பிள்ளைகள் என்று குடும்பமாக நீண்ட காலம் வாழ்ந்தவர்கள். திரு தியாகர் அவர்கள் மறைந்த பொழுதும் கோயில் அவருடைய பெயரில் தான் இருந்தது. அதன் பின் மூன்று பிள்ளைகளுக்கும் பங்காகி விட்டது. பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயிலின் பூசை உரிமை எட்டுப் பூசகர்களுக்குப் பங்காகி இருந்தது. அந்த எட்டுப் பேரும் ஒவ்வொரு வருசமும் ஒவ்வொருவராக மாறி மாறி வந்து பூசை செய்து போவார்கள். எட்டு வருஷங்களுக்கு ஒருமுறைதான் மறுபடியும் வர முடியும். ஒற்றுமை இல்லாதிருந்தால் தியாகரின் பிள்ளைகளும் அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஒவ்வொரு வருசமும் ஒவ்வொருவராக மூன்று வருஷங்களுக்கு மாறி மாறிப் பூசை செய்யவேண்டியிருந்திருக்கும்.

ஆனால் இந்த மூன்று பேரும் சகோதரபாசம் உடையவர்கள் மட்டுமல்ல பிள்ளையார் கோயிலின் வளர்ச்சியிலும், பெருமையிலும், புகழிலும் மிகவும் அவதானமாக இருந்தார்கள். சகோதரர்களில் மூத்தவர் சண்முகம். சொந்தத்தில் கடை வைத்திருந்து வியாபாரம் செய்தவர். இரண்டாமவர் பொன்னுத்துரை. சொந்தமாக நெற் காணிகள் வைத்திருந்து கமம் செய்தவர். மூன்றாமவர் செல்லத்துரை சொந்தமாகப் பேருந்து உரிமையாளராக இருந்து யாழ்ப்பாணப் பட்டணத்துக்கும் காரை நகருக்கும் இடையே போக்குவரத்துச் சேவை செய்தவர்.

அண்ணனும் தம்பியும் மனம் உவந்து தத்தமக்குரிய பங்குகளுக்குக் கையெழுத்து இட்டு திரு பொன்னுத்துரை அவர்களுக்கே அன்புடன் கொடுத்தனர். இதனால் மனநிறைவும் ஏற்பட்டதுடன் சகோதர பாசமும் வலுப் பெற்றது.

கோயிலின் நாற்புறமும் மதில். மதிலின் தென்புறத்தில் தெருவுக்கு வருவதற்கு ஒரு சிறிய படலை. கிழக்குப் பக்கத்து மதிலிலேதான் பிரதான வாசல். இரட்டைப் படலை. படலையை விட்டு இறங்கியவுடன் அவர்களுடைய நெல் வயல். வயலின் கிழக்குக் கரையிலே ஒரு கிணறு. கோயிலுக்கு வருவோர் கை கால்கள் கழுவலாம். ஊரவர்கள் குளிக்கலாம்.

கிணற்றை ஒட்டினாற்போல் குளம். சின்னக்குளம். சின்னக்குளத்துக்கு அப்பால் சில நெல் வயல்கள் அவற்றுக்கு அடுத்ததாக ஒரு குளம். பெரிய குளம். இதுதான் யாழ்ப்பாணத்திலே பெரிய குளம் என்று சொல்வார்கள்.

பெரியகுளத்தைச் சுற்றிலும் நிறைய வயல்கள். கோயிலின் கிழக்குப்புற வாசலுக்கு அடுத்தாற்போல் வலது பக்கத்திலே ஒரு பன்னீர் மரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளமல்லிகையும் எப்பொழுதும் மணங்கமழும் அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கும். இடது கைப்பக்கத்திலே ஒரு பெரிய கொடி மல்லிகையும் பக்கத்திலே பெரிய உயர்ந்த மணிக்கூட்டுக் கோபுரமும் உள்ளது.

வடக்கிழக்குப் பக்கத்திலே ஒரு கொன்றை மரம். பருவ காலங்களில் இலைகள் தெரியாமல் மஞ்சள் நிறப் பூக்கள் பூத்துச் சொரியும் அழகே அழகு. அடுத்தாற் போல் சற்று மேற்குப் பக்கமாக ஒரு பெரிய தேமா மரம். பெரும்பாலும் வாசம் மிகுந்த வெள்ளை மலர்கள் கொத்துக் கொத் தாகப் பூத்திருப்பதைக் காணலாம். தொடர்ந்து வடமேற்குத் திசையில் ஒரு வன்னி மரமும், மேற்கே ஒரு பெரிய வில்வ மரமும் நிற்கின்றன. மேற்கு வீதியை அடுத்தாற்போல் பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை. அந்த வித்தியாசாலை கட்டுவதற்குத் திரு.பொன்னுத் துரை அவர்கள்தான் நிலத்தை அன்பளிப்புச் செய்தார்கள் என்று அறிந் தேன்.

மேற்கு வீதியைப் பார்த்துக் கொண்டு அப்படியே தெற்கு வீதிப் பக்கம் வந்தால் அங்கே ஒரு பொன்னொச்சி மரம். எந்த நாளும் அதிலே நறுமணம் மிக்க மஞ்சள் நிறப் பூக்கள் மலர்ந்திருக்கும். அதற்குரிய பருவ காலத்தில் மரம் நிறைய மஞ்சள் நிறமாகவே தெரியும். தொடர்ந்து வந்தால் தெருவுக்கு வருவதற்குத் தெற்கு வாசலில் ஒரு படலை. இந்தப் படலைக்கு நேரே கோயிலின் தெற்கு வாசல் கதவு. முருகன் சந்நிதானம். கதவு திறந்தால் உள்ளே முருகன் கொலுவீற்றிருப்பதைக் காணலாம். தினமும் பிள்ளையாருக்குப் பூசை நடந்தவுடன் தொடர்ந்து முருகனுக்கும் பூசை நடக்கும்.

தெற்கு வாசல் படலையைத் தாண்டி தொடர்ந்து கிழக்குப் பக்கமாக வந் தால் மதிலின் தென்கிழக்கு மூலையிலே கோயிலின் மடப்பள்ளி. கோயிலின் உள்வீதியில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அந்தப் பெரிய மரங்களைத் தவிர வடக்கு வீதியின் உட்பக்கத்திலே ஐந்தாறு தென்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களும் நிற்பதைக் காணலாம். கோயிலின் தெற்கு வீதியைத் தவிர ஏனைய மூன்று வீதிகளிலும் மதிலோரம் உட்பக்கத்திலே நிறைய நிறைய செவ்வரத்தை மரங்கள் அழகிய பூக்களும் மொட்டுக்களுமாக நிற்பதைக் காணலாம். செவ்வரத்தை மரங்களிலே இடையிடையே தேன் கூடுகளும் இருக்கும். இந்த மரங்கள் அனைத்துக்கும் தீர்த்தக் கிணற்றிலிருந்து அடிக்கடி நீர்பாய்ச்சி விடுவார்கள்.

கோவிலின் வடக்குப் பக்கத்துச் சுவரிலே ஒரு சிறிய வாசலும் கதவும் இருக்கும். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தால் உடனேயே 'தீர்த்தக் கிணறு' இருக்கும். அந்தத் தீர்த்ததினால் தினமும் பிள்ளையாருக்கும் முருகனுக்கும் அபிஷேகம் நடை பெறும்.

கோயில் எந்த ஆண்டு கட்டப்பட்டதென்று எனக்குத் தெரியவில்லை. அப்பொழுதே வெள்ளை நிற வைரக்கற்களினால் தான் கட்டப்பட்டது. கட்டப்பட்டபொழுது முருகன் சந்நிதானம் இருக்கவில்லை. ஊரில் இருந்த பெரிய தனவந்தர் ஒருவர் (காகி இரத்தினசபாபதி என்று சொல்வார்கள். அவரது இயற் பெயர் என்னவென்று சரியாக எனக்குத் தெரியவில்லை). அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தனர். எனினும் ஆண் பிள்ளை இல்லையே என்ற கவலையினால் முருகனை மனமுருகி வழிபட்டு சுமார் 1945ம் ஆண்டளவில் பொன்னாலைப் பிள்ளையார் கோயிலின் தெற்குப்புற வாசலிலே ஒரு கதவு வைத்து உள்ளே முருகனைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் செய்வித்தார். இதன் பலனாக அவருக்கு ஆண் பிள்ளைகளும் பிறந்தனர். முதலாவதாகப் பிறந்த ஆண் குழந்தைக்குக் குகதாசன் என்று பெயரிட்டு மகிழ்ந்தார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து முருகனுடைய நித்திய நைமித்திய பூசைகள் உட்பட அனைத் துப் பூசைகளும் அவருடைய உபயத்திலேதான் நடைபெற்றன. கோயில் கட்டப்பட்டதிலிருந்து பலகாலம் பிள்ளையாருக்கு தினமும் ஒரு வேளை மட்டும், காலை இளம் வேளையில் நித்திய நைமித்திய பூசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. திரு பொன்னுத்துரை அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். முதலில் பிறந்த இருவரும் ஆண் பிள்ளைகள். மூன்றாவது பெண் பிள்ளை. மூத்தவர் தியாகராசா. அந்தக் காலத்தில் வேதாரண்யம் சென்று சமஸ்கிருதமும் பண்ணோடு இசை பாடுவதற்கும் பயின்று வந்தவர். அவருக்குத் திருமணமாகி முதலிலும் கடைசியிலும் ஒவ்வொரு ஆண் பிள்ளைகளுக்கு நடுவிலே மூன்று பெண்பிள்ளைகளுமாக எல்லாமாக ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். அவர் தான் பிறந்து வளர்ந்த வீட்டிலேயே தன் மனைவி பிள்ளைகள் எல்லாருடனும் தன் தந்தையையும் பராமரித்துக் கொண்டு வாழ்ந்துவந்தார்.

இரண்டாமவர் முத்துக்குமாரன். அவரும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குப் போய்ப் படித்துப் பட்டம் பெற்று 'வித்துவான் பொன். முத்துக்குமாரன் B .O .L ஆனார். திருமணம் ஆன பின்னரும் தன் மனைவி பிள்ளைகளையும் அங்கே கூட்டிக்கொண்டு போய் தனது படிப்பைத் தொடர்ந்து படித்துப் பட்டம் பெற்று, படித்த பல்கலைக்கழகத் தில் திறமையாகச் சித்தி அடைத்த காரணத்தினால் மேலைச் சிவபுரி கணேசா கல்லூரியில் சில காலம் ஆசிரியராகக் கடமையாற்றிய பின் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்து யாழ்ப்பாணத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தார். அவருக்கு முதலில் மூன்று பெண் பிள்ளைகளும் அடுத்தாற் போல் இரண்டு ஆண்பிள்ளைகளும் கடைசியாக ஒரு பெண் பிள்ளையு மாக எல்லாமாக ஆறு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் இரண்டாவது பெண் பிறந்து இரண்டு வருடங்களில் இறந்துவிட்டார். மூத்த மகன் சில மாதங்களுக்கு முன் காலமானார்.

பொன் முத்துக்குமாரன் அவர்கள் தமது பணி நிமித்தமாக தன் மனைவி பிள்ளைகளுடன் யாழ்ப்பாணப் பட்டணத்திலேயே ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தார். அன்னார் தமிழிலே ஆழ்ந்து அகன்ற புலமை உள்ளவர். நாட றிந்த நல்ல தமிழ்ப் பேச்சாளர். பேரறிஞர்களும் வியந்து போற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் மிகச் சிறப்பாகச் சொற் பொழிவாற்றுவார். கற்றோரும் மற்றோரும் விளங்கிக்கொள்ளும் வண்ணம் எளிமையான தமிழில் பெரும் திறமை உடையவர். அவர் எழுதிய பல புத்தகங்கள் அரசாங்கத்தினால் பாடப் புத்தகமாக்கப்பட்டன. அவற்றில் 'தமிழ் மரபு' என்னும் புத்தகம் அதன் சிறப்புக் கருதி இந்தியாவிலும் பல்கலைக்கழகங்களில் பாடப்புத்தகமாக்கப் பட்டது.

ஒரு வேளை மட்டும் நைவேத்திய பூசை நடைபெற்றுவந்த பிள்ளையாருக்கு இவருடைய உபயத்தினால் காலை மாலை இரு வேளைகளிலும் நைவேத்திய பூசை ஆரம்பித்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

சில காலத்தின் பின் இவருக்குப் பிள்ளையார் கோயிலுக்கு ஒரு கோபுரம் கட்ட வேண்டும் என்கின்ற ஆசை உண்டானது. எவரிடமிருந்தும் அன்பளிப்புப் பெறாமல் தனது சொந்தப் பணத்தினாலேயே வைரக்கற்களினால் கோபுரம் கட்டவேண்டும் என்று விரும்பினார். அதன்படி வெள்ளை வைரக்கற்கள் தருவிக்கப்பட்டு அராலி என்ற ஊரிலிருந்து கல்லுப் பொழிவோரை வரவழைத்து கோபுரம் கட்டு வேலை ஆரம்பமானது. பணத் தட்டுப்பாடு இல்லாமல் அவருடைய சொந்தச் செலவிலேயே கோபுர வேலைகள் மளமளவென்று தொடர்ந்து நடைபெற்று அவர் எண்ணிய மட்டத்துடன் நிறைவு பெற்று கும்பாபிஷேகமும் நடைபெற்றது. தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இனிதே நடைபெற்று எல்லாம் சுபமாக நிறைவு பெற்றன.

தியாகராசா, முத்துக்குமாரன் இருவருக்கும் ஒரு தங்கை. வள்ளியம்மை என்று பெயர். அவர் பக்கத்தில் சுழிபுரம் குருபூசை மடத்தைச் சேர்ந்த முருகேசர் மகன் சிவப்பிரகாசத்துக்குத் திருமணம் முடித்து வைத்தனர். அவர்களுக்கு முதலிலே ஒரு பெண் பிள்ளையும், அடுத்தாற்போல் மூன்று ஆண்பிள்ளைகளும், அவர்களைத் தொடர்ந்து இரண்டு பெண் பிள்ளைகளுமாக எல்லாமாக ஆறு பிள்ளைகளுடன் நல்லதொரு குடும்பமாக மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் சீருஞ் சிறப்புமாக நல்லொழுக்கத்துடன் மதிப்பும் மரியாதையுமாகத் திகழ்கின்றனர்.

தொன்று தொட்டு பிள்ளையாருக்கு நித்திய நைமித்திய பூசைகளுடன் பிரத்தியேகமாக ஆவணிச் சதுர்த்தியும், நவராத்திரி பூசைகளைத் தொடர்ந்து "கன்னி வாழை வெட்டுத் திருவிழாவும்" , அடுத்தாற்போல் பிள்ளையார் கதைப் படிப்பு 20 நாட்கள் நடைபெற்று 21ம் நாள் 'பெருங்கதை' (விநாயகர் சஷ்டி) திருவிழாவும், தொடர்ந்து மார்கழி மாதத்தில் பத்து நாட்கள் திருவெம்பாவை பூசைகளும் நடைபெறும்.

ஆவணிச் சதுர்த்தியிலன்று விசேட அபிஷேக ஆராதனைகளுடன் சுவாமி வீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறும். அன்று மேளதாளத்துடன் பூசைகள் நடைபெற்று சுவாமி வீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறுவதால் அன்று முழுவதும் ஊரே நல்ல ஆரவாரமாக இருக்கும்.

நவராத்திரி பூசைகள் நடைபெற்று பத்தாம் நாள் விஜய தசமியன்று "கன்னி வாழை" வெட்டும் நிகழ்ச்சி நடைபெறும். பொன்னாலைக் கோயிலில் (பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயிலில்) இருந்து சுவாமி ஊர்வலமாக வந்து அவருக்குத் தீப ஆராதனை செய்துதான் அவருடைய முன்னிலையில் வாழை வெட்டு நடைபெறும். நான் சிறுமியாக இருந்த பொழுது ஒருமுறை சுவாமியைத் தூக்கிக் கொண்டு வரும் பொழுது நிலத்திலே விழ விட்டுவிட்டார்கள். அன்றில் இருந்து சுவாமி இங்கே வராமலே வாழை வெட்டு நடைபெறும். அன்றைய தினம் சிலர் தங்களுடைய பிள்ளைகளுக்கு ' ஏடு தொடக்கும்' வைபவமும் செய்வார்கள்.

20 நாட்கள் பிள்ளையார் கதைப்படிப்பு நடைபெற்றதைத் தொடர்ந்து 21ம் நாள் பெருங்கதைத் திருவிழா நடைபெறும். அன்றும் மேளதாளத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். சுவாமி வீதி உலா வருதலும் நடைபெறும்.

திருவெம்பாவைப் பத்துத் தினங்களும் அதிகாலை 4:00 மணிக்கே ஆயத்த மணியாக காண்டாமணி அடித்து ஒலி எழுப்புவார்கள். மணி ஒலி கேட்டவுடன் ஆண், பெண், குழந்தைகள், சின்னஞ்சிறிசுகள் கூட நித்திரை விட்டெழுந்து அந்த நடுங்கும் குளிரிலும் கூடக் குளித்து முழுகி ஆசாரமாகக் கோயிலுக்கு வருவார்கள். காலை 5:00 மணிக்குப் பூசை தொடங்கும். ஒவ்வொரு பாடல் தொடங்கும்பொழுதும் புதிது புதிதாக வாழைப்பழம் வெற்றிலை பாக்கு படைத்துப் பாட்டுப் பாடி முடிந்தவுடன் தீப ஆராதனை செய்வார்கள். இப்படியே எல்லாப் பாடல்களும் பாடி முடித்தவுடன் 'பஞ்ச ஆரத்தி' காட்டி பூசை நிறைவுபெறும். பூசை நிறைவடைந்தவுடன் தீர்த்தம், விபூதி, சந்தனம் மட்டுமல்ல மோதகம், பொங்கல், சுண்டல் வாழைப்பழம் என்பனவும் பிரசாதமாக வழங்கப்படும். நடுநடுங்க வைக்கும் மார்கழிக் குளிரில் அதிகாலை வேளையில் குளித்து விட்டு வந்த பிள்ளைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான்.

பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயிலில் ஆவணி மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாட்கள் திருவிழா நடைபெற்று 17ம் நாள் ஆவணி ரோகிணி அபரபக்கத்து அட்டமித் திதி யில் தேர்த் திருவிழா நடைபெறும். தொடர்ந்து 18ம் நாள் தீர்த்தோற்சவ மும் அதற்கு அடுத்த நாள் 'பூங்காவனம்' என்று சொல்லப்படுகின்ற 'திருக் கல்யாண' வைபவமும் நடைபெறும் . தேர்த் திருவிழாவுக்கு முதல்நாள் 16ம் நாள் வேட்டைத் திருவிழா. வேட்டைத் திருவிழாவிலன்று பகல் திருவிழா நடை பெற்று, பின்னர் இரவுத் திருவிழாப் பூசைகளும் நிறைவடைந்து, சுவாமி உள்வீதி வலம் வந்து, கோபுரவாசல் வழியாக வெளியே வந்து, சுவாமி யும் அம்மன்களும் தனித்தனியாக ஒவ்வொரு பெரிய குதிரை வாகனத் தில் எழுந்தருளி, ஒவ்வொருவரும் கையிலே சவுக்கும் எடுத்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டைக்குப் புறப்படுவார்கள்.

முன்பின்னாக இல்லாமல் மூவரும் சமாந்தரமாக அங்கிருந்தே ஓட்டமாக ஓடி, பிள்ளையார் கோயிலை நோக்கி வருவார்கள். பிள்ளை யார் கோயிலை அண்மித்தவுடன் கோயிலின் மேற்குப்புற வெளி வீதி வழியாக வடக்கு வீதிக்கு வந்து, அப்படியே கோயிலின் முன் பக்கம் கோபுரவாசலுக்கு முன்னே வந்து, முன்னும் பின்னுமாக மூன்று முறை ஓடி ஓடி வந்து வேட்டையாடி முடிந்ததும், பிள்ளையார் கோயிலின் மூலத் தானத்திலிருந்து பஞ்சாரத்தி எடுத்துவந்து ஸ்வாமிகளுக்குப் பூப்போட்டு பூசை செய்து பஞ்சாரத்தி காட்டியவுடன் ஓட்டமாக இல்லாமல் சாதாரண மாக தெற்கிலுள்ள தெருவுக்கு வந்து அங்கிருந்து நேரே கோயிலைச் சென்றடைந்து, வெளிவீதியைச் சுற்றிவந்து கோயிலுக்குள் செல்வார்கள்.

திருக்கல்யாண தினத்தில், அன்று பகல் திருவிழா நடைபெற்று இரவும் பூசைகள் முடிவடைந்து இரவானதும் எந்தவித ஆரவாரமும் இல்லாமல் சுவாமி மட்டும் தனியே பிள்ளையார் கோயிலுக்கு வந்து 'மாப் பிள்ளை'யாக அலங்கரித்துக் கொண்டு பூந்தண்டிகையில் எழுந்தருளி மிகுந்த ஆரவார மாக மேளதாளத்துடன் பொன்னாலைக் கோயிலுக்குப் போய் அங்கே வெகு விமரிசையாகத் திருக்கல்யாண வைபவம் நடை பெறும்.

இவ்வாறு நியமமாகப் பூசைகள் நடைபெற்றுக்கொண்டு வரும்பொழுது ஒருநாள் பெரியவர் பொன்னுத்துரை அவர்கள் நோய்வாய்ப்பட்டார்.'பாரிச வாதம்' என்னும் நோய் அவரைப் பற்றிக்கொண்டது. தந்தை நோயுற்றத னால் மூத்த மகன் தியாகராசா அவர்களே பூசை செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தந்தையை விட மகனே கெட்டிக்காரன் என்று ஊரே போற்றிப் புகழும் அளவுக்கு நன்றாகப் பூசைகள் செய்து கோயிலையும் சிறப்பாக நிர்வகித்து வந்தார்.

இவருடைய காலத்திலே தான் கோபுர வேலைகள் நிறைவு பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக நிகழ்ச்சியை தங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையும் கண்ணாரக் கண்டு மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக அவரை ஒரு சாய்மனைக் கதிரையில் இருக்க வைத்து கதிரையுடன் சேர்த்துத் தூக்கி கொண்டுவந்து அந்தக் காட்சியைக் காண வைத்தார்கள். பெரியவர் ஆறேழு வருடங்கள் நோய்வாய்ப்பட்டிருந்து 1961ம் ஆண்டள வில் இறைவனடி சேர்ந்தார்.

பிள்ளையார் கோயிலின் மதிற்கரையோரமாக வயல்வெளி ஊடாக பக்கத்து ஊரான நெல்லியான் வரை போவதற்கு ஒரு நடை வரம்பு இருந்தது. மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் அகலமான வரம்பு தான் 'நடைவரம்பு' என்று சொல்லப்படும். பிள்ளையார் கோயிலின் நடை வரம்பிற்குப் பக்கத்திலே ஒரு பள்ளக் காணி. அது அவர்களுடைய சொந்த நெல்வயல். மாரி காலத்தில் நெல் விதைத்திருக்கும் காலத்தில் தெருவிலிருந்து ஆடுமாடுகள் வயலுக்குள் வருவதைத் தடை செய்வதற் காகத் தடிகள் நட்டு தற்காலிகமாக ஒரு வெளி அமைத்து மனிதர் போய் வருவதற்காக ஒரு 'கடப்பு' அமைத்திருப்பார்கள். நெல் அறுவடை முடிந்த வுடன் இந்த வேலி கடப்பு எல்லாம் அகற்றப்பட்டுவிடும்.

அந்தக் காணிக்கு நடுவிலே ஒரு வரம்பு அமைத்து வைத்திருப்பார்கள். அந்த வரம்பின் வழியாக நடந்துதான் பிள்ளையார் கோயில் கிணற்றடிக் குப் போய் வரவேணும். கோயிலில் இருந்து கிணற்றடிக்கு வருவற்காக காணியின் கிழக்குப் பக்கத்திலும் ஒரு நடைவரம்பு. மாரிகாலத்தில் மழை பொழிந்து குளம் நிறைந்திருக்கும்பொழுது சில சமயங்களில் கிணறு வரையிலும்கூட குளத்துநீர் வந்திருக்கும்.

'வரப்புயர நீருயரும். நீருயர நெல்லுயரும்' அல்லவா? அதனால் நெல் விதைப்பதற்கு முன்னர் காணிக்கு நடுவிலே உள்ள வரம்பு சற்றே உயர்த் திக் கட்டப்படும். பெரும்பாலும் 'மொட்டைக்கறுப்பன்' அல்லது 'கறுப்புக் கூரன்' நெல் தான் விதைப்பார்கள். கறுப்புக் கூரன் நெல்லின் நுனியில் ஈர்க்குப் போல மிக மெல்லியதாக ஒரு பொருள் நீண்டு வளர்ந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். அது முள் மாதிரி கைகால்களில் குற்றும். அதனால் அறுவடை செய்தவுடனேயே பாயில் அடித்து வைக்கோலை அகற்றி நெல்லைக் குவித்து வைத்து ஒரு பச்சை மட்டையினால் அடித்து அந்தக் கூர்களை முறியச் செய்து, அதன்பின் குல்லத்தில் (காணிக்குள்ளே 'சுளகு' என்று சொல்லமாட்டார்கள்) நெற்களை அள்ளி அள்ளிப் போட்டு நெல்லைத் தூற்றி பதர்கள், கூர்களை அகற்றி முத்துப் போன்ற நெற்களை மட்டும் சாக்குகளில் போட்டுக் கட்டி நெல் மூடைகளை வீடுகளுக்கு எடுத்துச் செல்வார்கள். இந்த வகை அரிசிகள் மிகவும் சுவையானவை. பசை நிறைந்தவை. எலும்பு முறிவு உள்ளவர்கள், சதைப்பிரிவு உள்ளவர்கள் இந்த அரிசிச் சோற்றைத் தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்ககள் சாப் பிட்டால் முறிவுகள், பிரிவுகள் நீங்கி பூரண சுகம் வருமாம்.

கோயிலின் சுற்றிவர உள்ள மதிற்கரையோரம் நடப்பட்டிருக்கும் மரங்க ளில் தினமும் வாசனை நிறைந்த வண்ண வண்ண மலர்கள் நிறைந் திருக்கும். பூசை செய்வதற்கும், மாலை கட்டுவதற்கும் தாராளமாகப் போதும். தேவைக்குச் சற்று அதிகமாகவே மலர்கின்றபடியால் இவர்கள் எடுத்தது போக எஞ்சியவை மரங்களில் அழகாக மலர்ந்திருக்கும்.

இருந்தும் கூட கோவிலுக்கென்று ஒரு நந்தவனம் அமைத்தால்த்தான் கோயிலின் அழகுக்கு மேலும் அழகு கிடைக்கும் என்று எண்ணியதாலோ என்னவோ நெல் வயலின் வடபகுதியில் பெரும்பகுதியை 'பூந்தோட்டம்' ஆக்கினார்கள். பூந்தோட்டம் அமைக்கவேண்டிய இடத்தைச் சுற்றிவர சீமெந்துக் கற்களினால் சுற்றுமதில் அமைத்து, முன்பக்கத்தில் ஒரு சிறிய படலையும் வைத்து வகை வகையான பூச்செடிகளை நாட்டி அத்துடன் செங்கழுநீர்களுக்கு ஒரு தண்ணீர்த் தொட்டியும் அமைத்தார்கள். ஒழுங் காக நீர்ப்பாசனம் செய்தமையால் செடிகள் மளமளவென்று வளர்ந்து விரைவிலேயே பூத்துக் குலுங்கத் தொடங்கிவிட்டன. செங்கழுநீர்த் தொட்டியில் செங்கழுநீர் மலர்களும் நிறைய மலர்ந்தன.

பிள்ளையாரின் பூசைகளுக்கும் மாலைகளுக்கும் தவிர வேறு கோயில் களின் பூசைத் தேவைகளுக்காகவும் இங்கே வந்து மலர் கொய்து சென்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். அன்று தொடக்கம் இன்று வரை நந்தவனம் சிறப்பாகப் பராமரிக் கப்பட்டு மிக அழகாகக் காட்சியளிக்கின்றது. நந்தவனம் அமைத்த பின் மிகுதியாய் இருக்கும் அந்த வயலின் சிறிய பகுதி நெல் விளைவிப்பதற்க்குப் போது மானதாக இல்லாதபடியால் எதுவித பிரயோசனமும் இல்லாமல் சும்மா கிடக்கின்றது.

1996ம் ஆண்டு பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயிலிலே ஆவணி மாதத் தேர்த் திருவிழா. அன்றைய தினம் திருவாளர் தியாகராசா அவர்களுக்குத் திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டு ஒருவரும் சற்றும் எதிர் பாராதவிதமாகச் சடுதியாக இறைவனடி சேர்ந்துவிட்டார். தந்தையாரின் மறைவுக்குப் பின் மூத்த மகன் பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்க ளிடமே முழுப்பொறுப்பும் வந்து சேர்ந்தது. கடைக் குட்டி அருள்மொழித் தேவர் அவர்கள் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதற்கிணங்க தன் மனைவி பிள்ளைகளுடன் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கேயே தங்கியிருப்பதனால் பிள்ளையாரின் பூசைப் பொறுப்பு, கோயிலை நிர்வகிக் கும் பொறுப்பு மட்டுமல்ல தாயாரைப் பராமரிக்கும் பொறுப்பும் பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்களுக்கே உரியதாயின.

பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்களும் நல்ல ஆன்மீகச் சொற்பொழிவாளர். கோயில்களிலும் ஆங்காங்கே நடைபெறும் சைவ சமய நிகழ்ச்சிகளிலும், தமிழர்களின் விழாக்களிலும் மிகச் சிறப்பாக உரையாற்றுபவர்.பெரியவர் திரு.பொன்னுத்துரை அவர்களைவிட அவரது மூத்த மகன் திரு.தியாகராசா அவர்கள் கோயிலைச் சிறப்பாக நிர்வகித் ததைப் போல அன்னாரை விடவும் அவருடைய மூத்த புதல்வன் பொன் னம்பலவாணர் அவர்கள் மேலும் சிறப்புடன் கோயிலை நிர்வகிக்கிறார் என்பது என் எண்ணம்.

கோயில் தொடங்கி இத்தனை ஆண்டு காலமாக நித்திய பூசைகளும் குறிப்பிட்ட சில விசேட பூசைகளும் மட்டுமே ஒழுங்காக நடைபெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. திரு.பொன்னம்பலவாணர் அவர்களுடைய காலத்திலேதான் சிறப்பான கட்டுமானப் பணிகள் நடைபெற்றதுடன் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட தினத்திலே கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து சில நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று குறிக்கப்பட்ட தினத்திலே தேர், தீர்த்தத் திருவிழாக்களுடன் பூர்த்தியடைகின்றன.

**திருமதி இராஜலக்சுமி விஜயசூரியர்**
**மொன்றியல், கனடா**



புனிதமான செயல்களுடன் வாழ்வதே புகழ்.

தூய இலட்சியமும் போதுமான தியாகமுமே கடவுள் விரும்புவது.

உணர்ச்சிவசப்படும்போது அறிவு விலகிவிடும்.

கோபத்தை அடக்குவதற்கு மவுனம் சிறந்த வழி.

அன்பு வார்த்தையில் மட்டுமன்றி மனத்திலும் இருக்க வேண்டும்.

மனநிறைவே தொட்டதைப் பொன்னாக்கும் வித்தை

வஞ்சம் தீர்க்கும் எண்ணம் எண்ணியனைப் பழிவாங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா மண்டபத்தில் புதிதாக பதிக்கப்பட்ட கருங்கல் தரை



முருகன் சந்நிதானம் புதிய அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலவர் தூபி குடமுழுக்கிற்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் தூபி குடமுழுக்கிற்கு முன்

# என் வாழ்வில் பொன்னாலைப் பிள்ளையார்

பொன்னாலை மிக அழகான கிராமம். கோயில்கள், வயல்கள், குளங்கள் பனங் கூடல்கள், கடற்கரை போன்ற இயற்கை அழகும் ரம்மியமும் நிறைந்த ஒரு கிராமம். மழைக்காலங்களில் பிள்ளையார் கோயில் முன்னாலுள்ள சின்னக் குளம் நிரம்பி வழியும். மறுகரையிலிருந்து கோயிலைப் பார்ப்பது எனக்கு மிகவும் பிடித்த காட்சி. நிரம்பிய குளத்தின் வடக்கும் கிழக்குமாக வயல் வெளியும், தெற்குக் கரையில் ஊரின் பிரதான வீதியும், மேற்கே கோவிலும் பூந்தோட்டமுமாக எங்கள் ஊரின் அழகை இன்னும் கூட்டுகிறது. அந்தக் குளத்துடன் கூடிய பிள்ளையார் கோவில் எங்கள் ஊரின் நடுநாயகமாக நிமிர்ந்து நிற்கிறது.

எங்கள் கோயிலின் பூந்தோட்டம் தனியே ஒரு கோயிலுக்கு மட்டுமான தன்று என்று என் தந்தையார் சொல்வார். இது பிள்ளையாருக்கும் கிருஷ்ணனுக்கும் (பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள்) உரியது என்பார். தினமும் பிள்ளையார் கோயிலிலிருந்து பூக்களும் சில நாட்களில் மாலைகளும் கிருஷ்ணனுக்கு அனுப்பப்படும். இந்த மரபு இன்று வரை தொடர்கிறது. பழைய பூந்தோட்டத்துடன் ஒப்பிட்டால் இன்றுள்ள பூந்தோட்டம் செழுமையாகக் காணவில்லை. காரணம் பராமரிப்பதற்கு கூலியாட்கள் தட்டுப்பாடு, மற்றும் கால நிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள வரட்சிகள் என்றாலும் பூசைக்கான மலர்கள் இன்னும் இங்கிருந்தே பெறப்படுகின்றது. முன்பெல்லாம் எங்கள் கோயிலில் வெளியார் கொண்டு வரும் பூக்களை அவை தரையில் விழுந்த பூக்களாக இருக்கலாம் என்னும் காரணத்தால் உள்ளே எடுப்பதில்லை. நான் பொன்னாலையில் வசித்த காலத்தில் விடியுமுன் எழுந்து பூந்தோட்டத்திற்குச் சென்று பூப்பறிப்பது வழக்கம்.

பிள்ளையார் கோயிலில் பூசைகள் மற்றும் திருவிழாக்கள் எல்லாமே எப்போதும் நேரம் தவறுவதில்லை. சில வேளைகளில் திருவிழா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களில் பிரதான குருக்கள் வெளியூரிலிந்து (முன்பெல்லாம் கரணவா யிலிருந்தும் பின்னர் கல்வியங்காட்டிலிருந்தும்) வருவார்கள். அவர்கள் வரத் தாமதமானால் அன்றி எப்போதும் திருவிழாக்கள் நேர காலத்துடன் முடிந்துவிடும். குருக்கள் ஐயா பேரூந்தில் வந்தால் நேரே கிணற்றடிக்கே போவார்கள். அங்கே முழுகிவிட்டு மிக ஆசாரமாகவே கோயிலுக்குள் வருவார்கள். குருக்கள் மட்டுமல்ல எங்கள் கோயிலில் எப்போதும் எல்லா ரும் ஆசாரமாக இருக்க வேண்டும் என்று எங்கள் தந்தையார் கண்டிப் பாக இருப்பார். கோயிலுக்கு வரும் சில பக்தர்கள் ஏதாவது விளக்கக் குறைவால் அவரது கண்டனத் துக்கு ஆளான சம்பவங்களும் உண்டு. கோபுர வாசலைத் தாண்டினால் ஆண்கள் மேலங்கிகளுடன் நுழையக் கூடாது என்னும் முறை அன்று எங்கள் கோயிலில் கிரமமாகப் பின்பற்றப் பட்டு வந்தது.

எங்கள் பிள்ளையார் கோயிலின் கிழக்கே குளம் , வயல், தெரு என்று அழகென்றால், மேற்கே உள்வீதியில் உள்ள தென்னைகளும், வில்வம், வன்னி, செவ்வரத்தை, பொன்னொச்சி மரங்களும் பின்னழகு. இவற்றின் நடுவில் அழகாகத் திகழும் மூலவர் தூபி. கோயிலைச் சுற்றிக் கும்பிடுபவர்களுக்கு இது ஒரு மனஅமைதியைக் கொடுக்கும். எவ்வளவு நவீன கோபுரங்களோ, மண்டபங்களோ அமைக்கப்பட்டாலும் பின் பக்கம் உள்ள இந்த இயற்கை அழகு மாறாமல் பாதுகாக்கப்பட வேண்டும். குறிப் பாகப் பல கோயில்களில் இருப்பது போல பிரகாரக் கோயில்களும் சுற்றுக் கொட்டகைகளும் அமைக்காது இந்த அழகு எதிர் வரும் காலங்களிலும் பேணப்பட வேண்டும் என்பது என் விருப்பம்.

இந்தப் பிள்ளையாரின் பெருமைகளில் முதன்மையானது இவர் பொன் னாலைக் கிருஷ்ணன் கோயிலின் அங்கமாக இருப்பது மட்டுமல்லாமல் தன்னளவில் சிறப்பாகவும் தனித்துவமாகவும் இருப்பதாகும். ஆவணியில் நிகழும் கிருஷ்ணன் கோயிலின் பிரதான திருவிழாக்களில் மூன்று திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள் எங்கள் கோயிலுடன் தொடர்புடையவையாகும். 1950களின் பிற்பகுதியில் ஏற்பட்ட ஓர் அனர்த்தத்தால் மூலவரை மாற்ற வேண்டி ஏற்பட்டது. அப்போது சுழிபுரம் சிவப்பிரகாசம் (என் தந்தையாரின் மைத்து னர்) திருமுருக கிருபானந்தவாரியாரின் நண்பராதலால் அவர் மூலமாகத் தமிழகத்தில் ஒரு ஸ்தபதியால் உருவாக்கப்பட்டு இப்போதுள்ள மூலவர் இங்கு கொண்டு வரப்பட்டார். இந்த மூர்த்திக்கான செலவுகளை கோவ ளம் சுவாமி முருகேசனாரின் பக்தர் ஒருவர் ஏற்றதோடு, மூர்த்தியை சுவாமி முருகேசரே முதலில் பூசித்து அவர்க்கான மூல யந்திரத்தையும் தாபித்தார். அதன்பின் குறைந்தது நான்கு முறையாவது நடாத்தப்பட்ட குடமுழுக்குகளின்போதும் மூலவரை இடம் அகற்றாமலேயே திருப்பணி செய்ய எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள்பாலித்தார்.

1970 களிலிருந்து காரைநகர் ஆலடியைச் சேர்ந்த வைத்தியநாதன் மாஸ்டர் (வணக்கம் வாத்தியார்) சிவபூசை செய்வதற்காக தினமும் மாலையில் வந்து மாலையும் அடுத்த நாள் காலையும் தனது சிவபூசையை முடித்துவிட்டுப் போவார். இவரும் சுவாமி முருகேசரின் ஆரம்பகாலச் சீடராவார். வணக்கம் வாத்தியார் ஆன்மிகமும், உலக அறிவும், உற்சாக மான மனநிலையும் உள்ளவர். மாலை வேளைகளில் இவரும், என் தந்தையாரும், நடராசக் குருக்களும் (இவர் திருவிழா நாட்களில் வருவார்) ஏனைய அன்பர்களும் எங்கள் கோயில் சூழலில் ஒரு சத்சங்கம். எனக்கு இவர்களோடு இருப்பது, கருத்துக்களைப் பரிமாறுவது மிகவும் நல்ல தருணங்களாக இருந்தன.

கோயிலின் அருகில் அசைவ உணவு சமைக்கப்படக் கூடாது என்பது மரபு. ஆனால் அயலவர்களை நாம் கட்டுப்படுத்த முடியுமா என்ன? அயலில் யாராவது புதிதாகக் குடியேறினால் அவர்கள் சைவ போசனக்காரராக இருக்கமாட்டார்களா என எங்கள் எதிர்பார்ப்பு இருக்கும். கோயிலின் தென் கிழக்கேயிருந்த வளவில் திரு தெய்வேந்திரசிங்கம் (தேவு) என்பவர் புது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனை கட்டிக் குடிபுகுந்தார் அவர்கள் சில வருடங்கள் அங்கே வாழ்ந்த பின் வேலை மாற்றல் வந்தபோது அந்த வீட்டை விற்றுவிட முடிவுசெய்து என்னைத் தொடர்பு கொண்டார். எந்தவித பேரமும் இல்லாமல் நியாய விலைக்கு அந்த வீட்டை எங்களுக்கு விற்றுவிட்டார். இப்போது அதுவே கோவிலுக்கான பிரதான வீடாக உள்ளது. தேவு அவர்களை நாங்கள் யாரும் எங்களுக்குத் தருமாறு கேட்கவில்லை. அவரை எங்களுக்கே விற்க வேண்டும் என்று நினைக்க வைக்கப் பிள்ளையாரால் மட்டுமே முடியும்.

எங்கள் குடும்பத்தில் பிள்ளையாரும் ஒரு உறவினர் போல. நான் மேற் படிப்பு, வேலை என்று கொழும்புக்குப் புறப்பட்டபோது என் தந்தை யார் சொன்னார் உன்னால் பிள்ளையாருக்குத் தொண்டு செய்ய முடியா விட்டாலும்கூட இங்கு யார் அதைச் செய்கிறாரோ அவரை ஆதரிக்க வேண்டும் என்று. இதை நான் சிறுவயதில் பார்த்திருக்கிறேன். என் சிறிய தந்தையார் வித்துவான் பொன்.முத்துக்குமாரன் அவர்கள் வெளியூரில் வாழ்ந்து வந்த போதும், மாதாமாதம் சதுர்த்திக்குக் கோவிலுக்கு வந்து சரீரத் தொண்டு செய்வதையும், தனது ஊதியத்தில் ஒரு பகுதியைப் பிள்ளை யாருக்குத் தருவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது அதே பண்பை அவர் பிள்ளைகள் இப்போதும் கொண்டிருப்பது எம் மூதாதையர் பிள்ளையார் மீது வைத்திருந்த பக்தியின் சிறப்பின்றி வேறென்ன.

ஓர் ஆலயத்தின் சிறப்பு அதன் பிரசாதத்திலும் தெரியும். அது ஒரு வகை இறை அருளும் கூட. உதாரணமாக திருப்பதி லட்டு, பழனி பஞ்சாமிர்தம் போல எங்கள் கோவில்களின் பிரசாதங்க ளும் தனித்தன்மையுடன் இருக்கும். பொதுவாகவே எங்கள் கோவில்களின் பிரசாதங்கள் யாழ்ப்பாணத்தின் பிரபலமான பல ஆலயங்களைக் காட்டிலும் நன்றாக இருக்கும். அதிலும் குறிப்பாகப் பிள்ளையாரின் மோதகமும், வைரவரின் வடையும் எங்கள் பிரதேசத்தில் மிகவும் பிரபலம். கிருஷ்ணன் கோவிலின் துளசி தீர்த்தம், இரவுப்பூசை (அர்த்தயாமப் பூசை) பால் பிரசாதம் போன்றவையும் சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தந்தையார் தினமும் அதிகாலை 4 - 4:30 மணியளவில் எழுந்து குளித்து தனது அனுஷ்டானம் முடித்து தனது ஆன்ம ஈடேற்றத்துக்கு உரிய சிவபூசை முடித்த பின்பே பிள்ளையாரின் பூசைக்கு ஆயத்தங்கள் செய்வார். அந்த மட்டில் என் அண்ணாவும் தனது அனுஷ்டானங்களை முடித்துவிட்டு வந்து விடுவார். நானும் அக்காவின் மகன்களும் 5 - 5:30 மணியளவில் குளித்து எங்கள் அனுஷ்டானங்களை முடித்து விட்டு கோவில் அலுவல்களைச் செய்ய வந்து விட வேண்டும் என்பது என் அப்பா வின் விருப்பம். சில வேளைகளில் பெரியவர்களுக்கு (அப்பா/அண்ணா) இயலாத வேளைகளில் அல்லது அவர்கள் வெளியூர் சென்ற சந்தர்ப்பங் களில் காலையோ மாலையோ சிறுவர்களாகிய நாங்களும் பிள்ளையாரின் பூசைகளைச் செய்ததுண்டு.

இப்போது எங்கள் ஆலயம் எங்கள் சகோதரர் பண்டிதர் பொன்னம் பலவாணர் அவர்களினதும் எங்கள் சகோதரியின் பிள்ளைகளினதும் முழுமையான அர்ப்பணிப்புடன் சிறப்பாக இயங்குகிறது. எங்கள் தந்தை யாரும் இவர்களும் நித்திய சிவபூசை செய்பவர்கள். அதன் பின்பே அவர்கள் பிள்ளையாருக்கான பூசையை ஆரம்பிப்பார்கள். கோவிலில் அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை ஆசார அனுட்டானங்கள் தவறாதவர் பூசிப்பதும், நிர்வகிப்பதும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திரு வருளே. எங்கள் பிள்ளையாரின் மகிமைகளை பலதடவை அனுபவங்க ளால் உணர்ந்திருக்கிறேன். அதேபோல் தன்னிடம் வந்த பல பக்தர் களுக்கு வேண்டியதை ஈந்து காத்து அருளிய சந்தர்ப்பங்களை அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். காலங்கள் மாறினாலும், காட்சிகள் மாறினா லும் எக்காலத்திலும் தன்னை நாடி வந்த அன்பர்களுக்கு எல்லாம் வல்ல கலசெட்டியவத்தை வாழ் சித்திவிநாயகப் பெருமான் துணையிருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

**தி. அருண்மொழித்தேவர்**
**சிட்னி, அவுஸ்திரேலியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை பறட்டையா குளத்து பிள்ளையாரின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும்

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தில் தொல்புரம் என்னும் பகுதியில் உள்ள சிறிய கிராமம் பொன்னாலை ஆகும். பிரசித்தி பெற்ற பொன் னாலை வரதராஜப் பெருமாள் கோயிலின் முதல் காவல் தெய்வமாக, பறட்டையா குளத்து சித்தி விநாயகர் என்னும் திருப்பெயர் கொண்டு விநாயகர் அருளாட்சி செய்து வருகிறார். இக் கும்பாபிஷேகத் தினத்தில் சித்தி விநாயகரின் அற்புதங்களையும் அனுக்கிரகங்களையும் சொல்வ தற்கு அவரின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றேன்.

இக்கோயிலின் அருகே வன்னிமரம் வில்வமரம் வெள்ளை எருக்க மரம் கடம்ப மரம் என்பன அமைந்து இருப்பது கோயிலுக்குச் சிறப்பைத் தரு கின்றது. அடுத்து காலை பூசை வேளையில் எமது முன்னோர்கள் காகம் உரு எடுத்து கோயில் ஐயாவினால் வழங்கப்படும் அமுதினை உண்டு ஆசி வழங்கிச் செல்கின்றனர். இதுவும் கோயிலுக்குச் சிறப்பைத் தரு கின்றது. கோயில் வாசலில் கிணறும் சிறு குளமும் அமைந்து இருப்பது அற்புதத்திலும் அற்புதமாக மிளிர்கின்றது. தற்போதைய ஆலய பிரதம குரு பொன்னம்பலவாணர் ஐயா அவர்கள் ஆலய குருவாக இருப்பது பொன்னாலை கிராமத்துக்குச் சிறப்பைத் தருகின்றது. அவரின் அறி வுரைகள் இறைவனை எவ்வாறு அணுகுவது பற்றி எல்லாம் சொல்லி வருவ துடன் எம்மையும் இறை சிந்தனையில் ஊக்கப்படுத்துவார். இப்படி யான குரு கிடைத்தமை நாம் செய்த புண்ணியம் தான். இக்கோயிலின் இன்னுமொரு சிறப்பு யாதெனில் இங்கு சீரடி சாய்பாபா வந்து இருக்கி றார். குருவும் தெய்வமும் சேர்ந்து இருப்பது அதி அற்புதம். இங்கு வந்து வழிபடுவோரின் துன்பங்கள் உடனே தீர்க்கப்படும். ஏனெனில் இங்கு வாக்கு கொடுப்பவரும் அருள் வழங்குபவரும் சேர்ந்து இருப்பது தான். வாக்குக் கொடுப்பவர் பாபா. அருள் செய்பவர் பிள்ளையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அம்மா வழி தகப்பன், பேரன், காலத்தில் இருந்தே பிள்ளையாரை வழிபட்டு வந்தார்கள். இதன் பேறாக அவர்களுக்குக் கார்த்திகை மாதத் தில் வரும் பிள்ளையார் கதை உபயம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. நாட்டு சூழல் காரணமாக எனது மாமாவால் தொடர்ந்து செய்ய முடிய வில்லை.1997ம் ஆண்டு தற்போதைய ஆலய குருவின் தகப்பனார் தியாக ராசா ஐயா அவர்கள் எனது கனவில் "நீ எனக்கு 2000/- தரவேணும் என்றும், கொஞ்ச காலத்துக்குப் பிறகு பொன்னாலை கிருஷ்ணருக்கு 1000/- கொடுக்க வேண்டி வரும் என்றும் கூறினார்." அன்றில் இருந்தே இன்று வரை எனது அம்மா பிள்ளையார் கதை செய்து வருகின்றார். ஐயா சொன்னது போல் 2005இல் இருந்து ஏகாதசி செய்து வருகிறேன். இது பிள்ளையாரின் அனுக்கிரகம் தானே?

2013ம் ஆண்டு மாசி மாதம் 14ந் திகதி காலை 9 மணி 30 நிமிடம் இருக்கும் எனது வேலைத் தளத்தில் இருக்கின்றேன். 8 வயது மதிக்கத் தக்க அழகான சிறுவன் என் கையைப் பிடித்துக் கொண்டு சிரிக்கின் றான். நான் வசிக்கும் வீடு வந்ததும் எனது கணவர் வீட்டில் தனியாக இருக்கின்றார். அவரையும் கூட்டிப் போவோம் என்று கூறினேன். அதற்கு அந்தச் சிறுவன் அப்பா வந்தால் திரும்ப உள்ளே போகமாட்டார். கூப்பிட வேண்டாம் என்று கூறினான். நான் தான் தனிய இருக்கிறார். எங்களுடன் வரட்டும் என்று கூறினேன். வந்தவர் நான் உள்ளே போக வில்லை. என்னைக் கூட்டிப் போய் பிள்ளையார் கோயில் கொடி மரத் தடியில் விட்டுவிட்டு மறைந்து விட்டார். மகனே மகனே, தம்பி தம்பி, என்று கூப்பிட்டேன். "எங்கே" தொலைபேசி அலாரம் கேட்டு சுயநினைவுக்கு வந்தேன். அப்ப நேரம் 11 மணி 30 நிமிடம். அன்று 2 மணி 30 நிமிடம் அளவில் எனது கணவனார் இறந்தார். விதியை யாராலும் மாற்ற முடியாது பறட்டையார் குளத்து விக்கின விநாயகர், முருகனின் பெருமைகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காக இதனை எழுதுகின்றேன்.

**திருமதி. அருள்மொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நீங்காத நினைவுகள்

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

திருமந்திரத்தின் விநாயகர் காப்பினைக் கூறிப் பொன்னாலை விநாயகப் பெருமானின் குடமுழுக்கு விழா மலரில் என் நீங்காத நினைவுகளைப் பகிரக் கிடைத்த சந்தர்ப்பத்தினைத் தந்த விநாயகரை வாழ்த்தி வணங்கு கிறேன்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றனர். ஆனால் பொன்னாலை என்ற சிறிய கிராமத் திற்கு இரண்டு கோவில்கள் அமைந்து சிறப்புச் செய்கின்றன. வரலாற்றுப் பெருமை மிக்க பொன்னாலை வரத ராஜப் பெருமாள் கோவில் ஒன்று. அதற்கு ஏழு வீதிகள் இருந்தன. அதன் ஏழாவது வீதியில் அமைந்திருந்தது இந்தச் சித்தி விநாயகர் கோவில். மேற் குறிப்பிட்ட ஏழு வீதிகளும் அமைந்திருந்த கருங்கற்களால் ஆன காத்திரம் மிக்க மதில்களை டச்சுக்காரர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் இடித்து அந்தக் கற்களை மக்கள் மூலம் சுமக்கச் செய்து சங்கானையி லுள்ள கோட்டையைக் கட்டுவதற்காக எடுத்துச் சென்றனர் எனக் கூறுகின்ற னர். அக் கோட்டையானது நிறைவு பெறாமல் அங்கு இருப்பதை இன்றும் காணக் கூடிய தாக உள்ளது.

இந்தப் பிள்ளையார் தன்னை வேண்டுவோர்க்கு வேண்டுவன எல்லாம் நல்கி, அவ்வூர் மக்களுக்குக் காவல் தெய்வமாக விளங்குபவர். 'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்பர். அவ்வாறு கீர்த்தி பெற்று விளங்குகி றார். அவ்வூருக்கு வரதராஜப் பெருமாளை வழிபட வரும் கோடானு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி பக்தர் கூட்டம் இந்த விநாயகப் பெருமானை வழிபடாது வரதராஜப் பெருமானை வழிபடச் செல்வது கிடையாது. அத்தகைய பெருமை படைத் தவர் இன்று குடமுழுக்கு விழாக்காணும் இந்த விநாயகப் பெருமான்.

அதுமாத்திரமன்றி இரண்டு கோவில்கள் அமைந்த இந்தச் சிறிய கிராமத் திற்கு இரண்டு குளங்கள் அமைந்திருந்ததும் ஒரு பெரும் சிறப்பு எனச் சொல்லலாம். இக் கிராமம் எழில் நிறைந்த, வளம் கொழிக்கும் ஓர் கிராம மாக அமைந்துள்ளது.

பசுமை நிறைந்த வயல்கள் நிறைந்த இந்தக் கிராமத்தில் அமைந்த இவ் விநாயகருக்கு அன்று தியாகராஜா ஐயா அவர்கள் நேரம் தவறாது பூசையை நடத்தி மிகவும் கட்டுப்பாடுகள் நிறைந்த கோயிலாக அதைக் காத்து வந்தார். அந்தக் காலகட்டத்தில் மனோரம்மியம் மிக்க ஒரு பூங்காவை அமைத்து அதிலிருந்து மலர் பறித்தே விநாயகருக்குப் பூசை செய்வார். வெளி அசுத்தங்கள் எதுவும் படாதவாறு மதிலமைத்து அந் நந்தவனத்தைப் பாதுகாத்து வந்தார். அப் பூங்காவில் ரோசா, மல்லிகை, நந்தியாவட்டை, சாமந்தி, துளசி, தாமரை, செங்கழுநீர், நீராம்பல், அல்லி, செவ்வந்தி எனப் பலவித மரங்களும் செடிகொடிகளுமிருந்தன. வனப்பும் வளமும் நிறைந்த மலர்கள் எல்லாக் காலத்திலும் பூத்துக் குலுங் கிப் புன்னகை செய்த காட்சி இன்று நினைத்தாலும் என் மனம் புளங்காகிதம் அடைகிறது.

அந்தப் பூங்காவினுள் ஐயா அவர்களின் அனுமதியின்றி எவராலும் உட் செல்ல முடியாத ஓர் பாதுகாப்புடன் கூடிய தெய்வீகப் பூங்காவாகவே அமைந்திருந்தது. அதிலும் எனக்கு நீங்காத நினைவாகவும், பெருமை யாக வுள்ள ஓர் விடயம் என்னவென்றால் என் பேரனார் வே.சு. கதிரவேற் பிள்ளை அவர்கள் கோவிலுக்குச் செல்லும்போது அவருடன் நான் சென்ற நேரங்களில் உள்ளே சென்று அந்த மனோ ராமியமான மலர்களை பார்த் துப் பெருமிதம் அடையும் பேற்றினைப் பல தடவைகளில் பெற்றிருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன் என்பதே. அம் மலர்களின் மணங்கள் எல்லாம் மானசீக உணர்வுக ளில் என்றும் இழையோடுவதை என்னால் உணரக்கூடியதாக உள்ளது. அத்துடன் கொளுத்தும் வெய்யிலில் இவ் விநாயகப் பெருமானின் உள் வீதியை வலம் வருபவர் எந்தவித வெப்பத்தையும் அனுபவிப்பதில்லை. ஓர் தட்ப நிலை தரும் பாங்கினை உணரக்கூடியதாக இருக்கும்.

இத்தகைய விநாயகர் ஆலயம் தியாகராஜா ஐயா அவர்களைத் தொடர்ந்து அவரது மகன் பொன்னம்பலவாணர் ஐயா அவர்கள் பூசை செய்யும் பேற்றினைப் பெற்றிருக்கிறது. அவரிடம் நான் பண்டித வகுப்பிற்கான இலக்கணப் பாடங்களில் ஏற்படும் ஐயங்களைக் கேட்டுப் படித்த நாட்களை யும் என் நீங்காத நினைவுகளுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். தற்போது அவர் மருமகனான ஈசன் ஐயா அவர்கள் கோவில் பூசைகளில் உதவி செய்து வருவதாக அறிகின்றேன்.

எமது வீடு இந்த விநாயகப் பெருமானின் திருக்கோயிலுக்கு அடுத்த வீடாக இருந்தது. எமக்கெல்லாம் ஓர் பெருமையான நினைவாக நிலைத் துள்ள தோடு எம்மைப் பிரபல்யமடையவைத்தது எனக் குறிப்பிடுவதில் பெருமிதமடைகிறேன்.

இறுதியாக, இந்த கோவிலில் தான் எனது சமய தீட்சையினை இந்தியாவி லிருந்து வருகை தந்திருந்த ஒரு குருக்களிடம் பெற்றுக் கொண்டதும் எனது நீங்காத நினைவாக நிலைத்து நிற்கின்றது என்பதையும் கூறி நிறைவு செய்கின்றேன்.

**யோகா அருள்சுப்பிரமணியம்** – MSc in Yoga
**டொரொன்டோ, கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடித்தம்ப மண்டபம் (குடமுழுக்கின் முன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேற்கு மூலையில் இருந்து ஆலயத்தின் அழகான தோற்றம்



பிரதான கும்பம் அடியார்கள் சூழ வீதி வலம் வருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# 2010–2012 திருப்பணி வேலைகள்

எங்கள் பிள்ளையார் கோவில் அர்ச்சகராகவும், நிர்வாகியாகவும் விளங் கிய பொன்னுத்துரை ஐயாவின் மகனான வித்துவான். பொன். முத்துக் குமாரன் அவர்கள் சுமார் 55 வருடங்களுக்கு முன் பிள்ளையார் கோவில் கோபுரத் திருப்பணியை ஆரம்பித்திருந்தார். வெள்ளைக்கல் என்னும் வையிரக்கல்லினால் வியாழ வரி வரை அவர் திருப்பணியாக இக் கோபுரம் அமைந்திருந்தது.

பல ஆலயங்களில் கோபுரத் திருப்பணிகள் நிறைவுற்று ஆலயங்கள் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தன்மையைக் கண்ட எம் ஆலய அன்பர்கள் இக் கோவில் கோபுரத்தையும் பூரணமாக்கவேண்டும் என விரும்பினர். பொன்னாலை அருள்மிகு சித்தி விநாயகப்பெருமான் அருள் தூண்டு தலால் 2004ஆம் ஆண்டு இந்த இராஜகோபுர திருப்பணிச்சபை அமைக் கப்பெற்றது. இத்திருப்பணிச் சபையை அமைக்க திரு.வே. இரத்தி னம், திரு.க.செல்வம், திரு.மா.கோவிந்தசாமி ஆகியோர் ஊக்கத்துடன் செயற்பட்டனர்.

குளக்கோட்டன் என்னும் பெயரால் புகழடைந்த அரசன் பொன்னாலை யிலும் ஏழு வீதிகள், கோபுரங்கள், அமைக்கும் திருப்பணிகளைச் செய்வித்தான். இம் மன்னன் அமைத்த ஏழாம் வீதியில், ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்பவர்கள் முதலில் வணங்கிச் செல்ல அமைந்துள்ள விநாயகர் ஆலயத்துக்கு ஒரு கோபுரம் அமைப்பது என்பது விநாயகர் அடியார்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் செயலாகும்.

திருப்பணிக்கு வேண்டிய நிதி திரட்டப் பெருமுயற்சி மேற்கொள்ளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. ஆனால் 2010ஆம் ஆண்டு வரை ஒன்பது இலட்சம் ரூபாவே சேகரிக்க முடிந்தது. ஆனால் கோபுரப்பணியை நிறைவேற்ற இருபத் தைந்து இலட்சம் முதல் நாற்பத்தைந்து இலட்சம் வரை தேவைப்படும் என மதித்திருந்தார்கள்.

பண்டைய நகர நிர்மாணம் எத்தகையது என்பதற்கு இரண்டொரு தலங் களைப் பார்த்தால் போதும், ஊரின் நடுவிலே கம்பீரமாக நிற்கின்ற கோபுரம், எம் பெருமான் இங்கேதான் உறைகிறார் என்பதற்கு அடையாளமாக அழகிய பொற் கலசங்களுடன் கூடிய கோபுரங்களைக் கண்டவுடன் நம் தலைகள் தாமாகத் தாழக் கரங்கள் குவிகின்றன. "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்பது முதுமொழி. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" அதுவும் இயலாதவர்களுக்கு கோபுர தீபம் வாழ்க்கைப் படகுக்கு ஒரு கலங்கரை விளக்காகக் காட்சி தரும்.

ஒன்பது இலட்சம் ரூபாவை மட்டும் வைத்துக்கொண்டு திருப்பணி ஆரம்பிக்க நான் தயங்கியபோதும் "வேலையைத் தொடங்கினால் பிள்ளையார் நிதியைத் தருவார்" என்ற கருத்து பலருக்கும் இருந்தது. பிள்ளையாரின் அருள் துணைபுரியும் என்ற நம்பிக்கையுடன் 2011ஆம் ஆண்டு தைப்பூசத்தன்று முகூர்த்தக்கால் நாட்டித் திருப் பணி ஆரம்பிக் கப்பட்டது.

குறைந்த செலவில் கோபுரம் அமைக்கத்தக்க மதிப்பீட்டைத் தந்த அராலியூர் திரு.மாணிக்கம் இராசரத்தினம் தன் மூப்புக் காரணமாக தன் மருமகன் திரு.கந்தசாமி பிரபுடதேவன் (குட்டி) என்பவரை கோபுர வேலைக்குப் பொறுப்பாக அமர்த்தினார். திரு பிரபுடதேவனும் குழுவி னரும் சுறுசுறுப்புடனும் அக்கறையுடனும் வேலையைச் செய்யச் செய்ய பிள்ளையார் அருளால் நிதி வந்துகொண்டே இருந்தது. ஆனாலும் சிற் பங்கள் அமைக்கப் பெரும் தொகை தேவைப்படும்.எனவே சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமலே கோபுரத்தை நிறைவுசெய்வோம் என எண்ணியபோது பல அன்பர்கள் குறைந்த தொகையான சிற்பங்களையாவது அமைக்க வேண்டும் பிள்ளையார் துணை கிடைக்கும் என வற்புறுத்தினர்.

நாம் எண்ணியபடி அழகான சிற்பங்களை அமைக்க, தென் இந்தியா சிதம்பரம் புருஸோத்தமன் குழுவினர் பொருத்தமானவர் என நம் பிரபுட தேவன் சிபாரிசு செய்து அவர்களை நம்முடன் இணைத்து உதவினார். அவர்களும் நாம் விரும்பியவண்ணம் விரைவாகவும் அழகாகவும் 76 சிற்பங்களை மூன்று வாரத்தில் அமைத்துத் தந்தார்கள்.

என் மாமனார் பொன். முத்துக்குமாரன் அவர்கள் ஆரம்பித்து வியாழ வரிவரை கட்டியிருந்த கோபுர வேலையை நிறைவு செய்வதற்காக அமைக்கப்பட்ட இராஜகோபுரத் திருப்பணிச் சபையில் என்னைப் பொருளாளராகப் பங்கேற்குமாறு கேட்டுக் கொண்டபோது நானும் சம்மதித்து பொறுப்பான காரியத்தைச் செய்து வந்தேன். பொருளாளர் என்ற வகையில் எனது பொறுப்பான கடமையினை இலகுவாகவும் சிக்கன மாகவும் செய்து முடிக்கப் பல மெய்யன்பர்கள் தங்கள் உதவி களை அர்ப்பணிப்புடன் வழங்கியிருக்கிறார்கள்.

2011ஆம் ஆண்டு தைப்பூசத்தன்று முகூர்த்தக்கால் நாட்டித் திருப் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வருடத்தில் கச்சிதமாகவும், சிக்கனமா கவும் திருப்பணி வேலைகள் பூர்த்தியாக, 2012 தைப்பூசத்துக்குக் கும்பா பிஷேக மும் நடாத்திவிட்டோம்.

புதிய அழகிய இராஜகோபுரத்தைத் தரிசித்து மகிழ உதவியவர்கள், ஒத்துழைப்பு நல்கியவர்கள் அனைவருக்கும் பொன்னாலை சித்தி விநாயகப் பெருமான் திரு வருள் துணைபுரியும்.

**சி. வயித்தீஸ்வரன்.**
**முன்னாள் தபால் அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை கலசெட்டியவத்தை சித்தி விநாயகர் ஆலயம்

எமது கிராமத்தின் தனித்துவங்களில் ஒன்று பறட்டயா குளத்துப் பிள்ளையார் கோவில் என மக்களால் அழைக்கப்படும் பொன்னாலை கலசெட்டியவத்தை சித்தி விநாயகர் ஆலயம் ஆகும். இக்கோயில் எவ்வாறு தன் சமூகத்தின் கடந்த காலத்தினை பிரதிபலிக்கும் ஒன்றாக விளங்குகின்றது என்பதனை நோக்கின், கோயில் என்பது தான் வாழும் பண்பாட்டின், அல்லது சமூகத்தின் அல்லது குழுமத்தின் தனித் தன்மை வாய்ந்த ஒரு சமூக உற்பத்தி. அவற்றின் இயங்கு நிலையின் முழுமைத் தன்மையை வரலாறுகள் மூலம் ஜனநாயகத் தன்மையுடன் முழுமையாகக் கூறி விட முடியாது. வரலாறு என்பது கடந்த காலம் பற்றியது. ஆனால் உண்மையில் அவ்வாறு இல்லை. வரலாற்றை எழுதுபவர் நிகழ்காலத் திலிருந்து கடந்த காலத்தைப் பார்ப்பதாலும், அவரது சமூக இருக்கை நிலைகள், (இனம், மதம், சாதி, பால்) கருத்துநிலைகள் என அனைத்தும் செல்வாக்குச் செலுத்துவதனாலும் வரலாறுகள் பூரணமானவையாக விளங்குவதில்லை. எனவே “பொன்னாலை கலசெட்டிய வத்தை சித்தி விநாயகர் ஆலயமும் அதனோடு இணைந்த வாழ்வியல் கோலங்களும் “எனும் தலைப்பில் ஒரு பகுதியையே இக்கட்டுரை கொண்டு வந்துள்ளது. மேலும் சமூக மரபு, சமஸ்கிருதமயமாதல், பொருளாதாரம், அரசியல், சமயம் என்கின்ற எண்ணக்கருக்களோடு இக்கட்டுரைத் தலைப்பை நோக்கிச் செல்வதாக அமைந்துள்ளது.

சமூகம் என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டம் அல்லது குறிப் பிட்ட மக்கள் குழுவை குறிக்கும் . அவர்கள் ஒரே மாதிரியான கட்ட மைப்புக்களுடன் (சமூகக் கட்டமைப்பு ,பொருளாதாரம் சமயம், அரசி யல், நம்பிக்கைகள், விழுமியங்கள், தொழில்நுட்ப முறைகள்) ஒன்றா கச் சேர்ந்து வாழ்வார்கள். அவ்வகையில் பொன்னாலைக் கிராமத்தின் சமூகக் கட்டமைப்பை நோக்கின், ஆரம்ப காலங்களில் தெளிவான சாதி பகுப்பு முறை நிலப்பகுப்பு, பொருளாதார வளங்களை அடிப்படை யாகக் கொண்டு காணப்பட்டது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் மீன்பிடி என்கின்ற இரு பிரதான வளங்களையும் அடிப்படை யாகக் கொண்டு காணப்பட்டது. ஒரு குழுமத்தில் நீண்ட காலமாக தொடரப்படும் விடயங்கள் மரபுகளாகக் கொள்ளப்படும். யாழ்ப்பாண இந்து சமய மரபில் கோயில்களில் பூசை செய்பவர்களாகப் பிராமணர் குலத்தவர்களும் , சைவக் குருமார் பரம்பரையைச் சேர்ந்தவர்களும் உள்ளனர் . இங்கு பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத் தில் பிராமணர்கள் பூசை செய்ய பிள்ளையார் கோவிலிலும் வைரவர் கோயிலிலும் சைவக் குருமாரும் பூசை செய்து வருதலைக் காண முடி கிறது. மக்களின் பெருமதிப்பிற்குரிய அமரர்.தியாகராஜா ஐயா அவர்க ளின் தந்தை அமரர் பொன்னுத்துரை ஐயா அவர்களால் கொட்டிலாக இருந்த இவ்வாலயம் 1900 களில் ஆகம முறைப்படி புதுப்பித்துக் கட்டப் பட்டது.

ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் அவர்களின் தனி முயற்சிக ளாலும் விவசாயத்தில் ஈடுபட்டவர்களினதும் மற்றும் ஊரவர்களது பங் களிப்புடனும் பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெற்று விளங்கி யது. விவசாயக்கூலி, மீன்பிடித் தொழில், பனையேறும் தொழில் ஆகி யவற்றை பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டிருந்த சமூக குழுமத் திற்கு ஆலயப் பிரவேசம் கடினமானதாகவே இருந்தது. அல்லது மறுக் கப்பட்டது. 1970களில் ஏற்பட்ட தமிழ்ச் சமூக மாற்றம் எமது கிராமத்தைப் பொறுத்தவரை அயல் கிராமங்களில் இருந்து அனைத்து மக்களும் வருகை தந்த போதும் எமது கிராமத்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆலயப்பிரவேசம் தொடர்பாக இறுக்கமான நிலை தொடர்ந்து வந்தது என்றே கூறலாம். 1990களின் பின்பே அனைவருக்குமான ஆலயப் பிரவேச அனுமதி கிடைத்தது. இதன் பின்பே ஆலயங்கள் ஊரிலுள்ள அனைவரை யும் இணைக்கும் ஒரு சமூக நிறுவனமாக மாறத்தொடங்கின. அவ்வகை யில் சமய சமூக மரபுகளை மிக இறுக்கமாகப் பின்பற்றிவரும் கோயி லாக இருந்தாலும் இன்று இப் பிள்ளையார் கோவில் பல மாற்றங்களைக் கண்டு வளர்ச்சி அடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரும் அதன் அறுவடையில் அதன் விளைச்சலுக்கு ஏற்ப குறிப்பிட்ட ஒரு பங்கை அல்லது அளவை கோவிலுக்குத் தானமாக வழங்குவது இன்றுவரை தொடரப்படும் ஒரு மரபாகும். இவை மட்டுமன்றி அடியார்களினால் வழங்கப்படும் அன்பளிப்புகள், சைவக் குடும்பங்களின் உபயங்கள், ஊர் மக்கள், புலம்பெயர் மக்கள் என இவர்களின் பங்களிப்புகள் போன்றவற்றால் 2001 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீண்டும் 2020ல் குடமுழுக்கு நடைபெறுகிறது.

சமூகத்தால் கோயிலுக்கும் கோயிலால் சமூகத்திற்குமான இடை வினை உறவு என்பது இங்கு மிக நெருக்கமானது. ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் மிகப் பெரிய புண்ணியமாகக் கருதி இங்கு இன்று வரை உள்ள ஒரே பாடசாலைக்கு ஆரம்பத்தில் நிலம் வழங்கிய பெருமை இக் கோயிலைச் சேர்ந்த மதிப்பிற்குரிய பொன்னுத்துரை ஐயா அவர்களுக்கு உண்டு. இக்கோவிலோடு சேர்ந்த தனது சொந்த நிலத்தை மிகவும் தூர நோக்குடன் ஊரில் அமைந்த பாடசாலைக்குத் தந்து உதவியமையால் இன்றுவரை இக்கிராமம் பல்வேறு திறமை கொண்ட நல்ல மனிதர்களை உருவாக்கியது.

மரபு, பாரம்பரியம் என்பது நூறுவீதம் அது உருவாக்கப்பட்ட காலத்துடன் பின்பற்றப்படுவதில்லை. அவ்வாறு பின்பற்றப்பட்டாலும் காலம்தோறும் சிறு அளவிலான மாற்றங்களை அவை பெற்றுக் கொண்டே இருக்கும் . அதாவது பண்பாட்டின் எந்த ஒரு கூறும் ( சமயம், சமூக அமைப்பு, பொருளாதாரம் ,தத்துவம், அரசியல் ,விழுமியம், நம்பிக்கைகள் , கலைகளின் உருவ ,உள்ளடக்கங்கள்) ஒருபோதும் கடந்த காலத்தின் அதே தூய்மையுடன் பின்பற்றப்படுவதில்லை .அது கால தேச அரசியல் சமூக இயக்கங்களின் மாற்றங்களுக்கு ஏற்ப, தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சமூக, பண்பாட்டு மாற்றங்கள் சமயத்திலும், அதன் வழிபாடுகளிலும் மாற்றங்களைக் கொண்டு வரும்போது அது சமஸ்கிருதமயமாதல் என அழைக்கப்படும். சமஸ்கிருதமயமாதல் பண்புகளை சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம். ஆகம முறைப்படி அமைந்து அதில் கூறப்பட்ட பூசை முறைகளைப் பின்பற்றும் கோயில்களின் பண்புகளை, ஆகம முறைப்படி அமையாத சிறிய கிராமிய கோவில்களால் அவற் றின் பண்புகளைப் பின்பற்றும் அனைத்து சமயரீதியிலான விடயங்க ளூம் இவற்றில் அடங்கும். வழிபாட்டு ரீதியான மண்டபங்கள், தீர்த்தக் கேணி, விமானம் , இராஜகோபுரம், மணிக்கூட்டுக்கோபுரம், மற்றும் பெரிய அளவில் சுவாமி உலா கொண்டு செல்லும் வாகனங்கள், தேர் முதலியவற்றைப் பயன்படுத்துவதையும், கூடவே ஆகம வழிப்பட்ட கிரியைகள் பூசைகள் உற்சவங்கள் என்பவற்றைப் பின்பற்றப்படுவதையும் இங்கு குறிப்பிடலாம். மேலும் அலங்காரத் திருவிழாக்கள், பொங்கல், அல்லது குளிர்த்தி பூசைகள் மகோற்சவங்களாக மாற்றப்படுதல், காப்பு பூசைகள் (கௌரி காப்பு) விளக்கு பூசை, கும்பாபிஷேகம், சூரன்போர் என்று சிறிய அளவிலான கோயில்களில் அம்மன், பிள்ளையார், முருகன் கோவில்களில் மட்டுமன்றி சிறு தெய்வ வழிபாட்டுக்கு உரிய வைரவர், ஐயப்பன், ஆஞ்சநேயர், முனியப்பர், அண்ணன்மார் கோயில்களிலும் ஏற்படும் இம்மாற்றங்களும் இந்த சமஸ்கிரத மயமாதலின் பட்டவையே .

இதற்கான காரணம் முன்பு கூறப்பட்டது போன்று 1970களில் பின்பு ஏற்பட்ட அரசியல் சமூக ஸ்திரமற்ற தன்மைகளும், புலம்பெயர் மக்களின் பங்களிப்பும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆலயப் பிரவேசம் என்பது அனைவருக்கும் கிடைத்தது. ஒவ்வொரு சிறிய சிறிய குழுமத்தவர்களும் பெரும் கோயில்களுக்குச் சென்று வணங்கி வருதல் மூலம் தம்மை அவற்றுடன் இணைத்து உளவியல் ரீதியாகத் தம்மை மேல் நிலைப்படுத்த விரும்பிய அதேவேளை தத்தமக்குப் பிரத்தியேகமான சிறுதெய்வ அல்லது குல தெய்வ வழிபாடுகளிலும் மேற்குறிப்பிட்ட மாற்றங்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவர விரும்பினர். இதற்கு அதிகபட்சம் புலம் பெயர் மக்களின் பங்களிப்புகள் உதவியது என்றால் மிகையில்லை. இவ்வாறான நிலை மைகளால் இன்று பொன்னாலைப் பிள்ளையார் கோவிலும் இச் செல்வாக்கிற்கு உட்பட்டது என்றே கூறவேண்டும் .

முன்பு தைப்பொங்கல், சிவராத்திரி , வருடப்பிறப்பு, மாதாந்த இரு சதுர்த்தி தினங்கள் , பொன்னாலை வரதராஜ பெருமாள் கோவிலின் மகோற்சவத்தில் கொடியேற்றத்தின் முதல் நாள் கோவிலுக்கு ஊர்வலமா கப் பிள்ளையார் உலா சென்று வருதல், அதேபோன்று பூங்காவனத் திருவிழாவின் ஒரு அங்கமாகத் திருக்கல்யாண நிகழ்விற்குப் பெருமாள் இப் பிள்ளையார் கோயிலில் இருந்து புறப்பட்டு மணவாளக் கோலத்தில் செல்லல் ஆகிய நிகழ்வுகளும், நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் சஷ்டி (பெருங்கதை), திருவம்பாவை ஆகிய சிறப்புப் பூஜைகளைக் கோயில் கொண்டு இருந்தது . இன்று இவற்றுடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பிக் கப்பட்டு தேர்த் திருவிழா, தீர்த்தம், பூங்காவனம் என சிறப்பாக நடை பெறுகின்றன . அத்துடன் 2010ஆம் ஆண்டளவில் சிற்பங்களுடன் கூடிய ராஜகோபுரமும் நிர்மாணிக்கப்பட்டு முழுமையாக ஒரு தனிக் கோயிலாக வும் அதேவேளை புராணகால சிறப்புக்களுடைய பொன்னாலை ஸ்ரீ வரத ராஜப் பெருமாள் கோவிலின் ஏழாவது சுற்றுப் பிரகாரத்தில் அமைந்து இன்னொரு முழுமையின் ஒரு பகுதியாகவும் விளங்குகின்றது.

இக் கோயிலின் அமைவிடம் பற்றி நோக்கின் கிழக்கே குளம்,வடக்கே வயல்கள் என்ற இயற்கைச் சூழலுடன் மிக நெருக்கமாக இணைந்ததாக, மேற்கே பாடசாலையும், தெற்கே மக்கள் குடியிருப்பும் என அமைந்து உள்ளது. விநாயகருக்குச் செவ்வாய் வெள்ளிக்கிழமைகள் சிறப்பானவை இங்கு அருகில் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலும் அமைந்து அதன் சுற்றுப் பிரகார வீதியில் பிள்ளையார் கோவிலும் அமைந் துள்ளதால் இங்கே ஞாயிற்றுக்கிழமைகளிலும் அடியார்கள் வருகை தருவதைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் உலகின் எல்லாச் சமயங்களிலும் மதம் சார் கட்டடங்கள் அதன் சமூக ஒருங்கிணைப்பு தேவை கருதியும், வேறு இடையூறுகள் இன்றி ஒரு நிலைப்பாட்டை உருவாக்குதல் பொருட்டும், அவற்றின் அழகியல் தேவை கருதியும் அவற்றை இயற்கை வளங்களுடன் இணைந்த பெரிய பொது வெளிகளுடன் இணைத்தே உருவாக்கியுள்ளனர்.

இந்து சமயத்திலும் குன்றுகள், கடலோரங்கள் காடு சார்ந்த முல்லைப் பிரதேசங்கள், ஆற்றங்கரை, குளக்கரை, வயல் வெளிகள் என அமைந்த கோயில்களும் இதன்படியே தெரிவு செய்யப்பட்டன. இவற்றில் ஆற்றங்கரையோரம், அரச மரம் ,மருதமரம், குளக்கரைகள் என்பன பிள்ளையார் விரும்பி உறைவதான ஐதீகங்கள் நம்பப்பட்டு ஆலயங் கள் அமைக்கப்படுகின்றன. இங்கும் மருத நிலமும், மருதம் மரத்துடன் கூடிய குளமும் கொண்ட பெருவெளி இக்கோயிலுக்கான ஐதீகத்துடன் கூடிய அழகியல் பரிமாணத்தை மேலும் மெருகூட்டுகின்றன. மழை காலத் தில் நெற்பயிர்களை வருடும் காற்றும் ,குளத்தின் கரையில் நீர் முட்டி மோதி எழும் - மெல்லிய ஓசையும்,முன் கிணற்றில் இருந்து கிடைக் கும் கதகதப்பான நீரும்,பல்வேறு நிறங்களில் விரிந்து கொண்டிருக்கும் பூக்களின் நறுமணமும், பூசையின் போது கேட்கும் பல் வேறுபட்ட மணி களின் ஓசைகளும் இவையாவும் சேர்ந்து ஐம்புலன்களுக்கும் கிடைக் கும் அனுபவம் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை.இத்தோடு சுமார் இருபத்தைந்து வருடங்களின் முன்பு எத்தனை குழந்தைகளும் சிறார்க ளும் கோவிலுக்கு வழிபாட்டு நோக்கத்திற்காக மட்டும் சென்றார்கள் அவர்களின் அறிவுத்திறன் விருத்திகளையும், சமூகமயமாதல் பணிக ளையும் ஆலயங்களும் தான் முன்னெடுத்துச் சென்றன.

இவை மட்டுமன்றி கர்ப்பக்கிரகத்தின் அளவிற்கு ஏற்ப அமைந்த மண்ட பங்களும் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட வசந்தமண்டபம், சிற்பங் களுடன் கூடிய ராஜகோபுரம் அவற்றில் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் என இவை அனைத்தும் இக்கோயில் சார்ந்த கட்டிட சிற்பக்கலை களுக்கு உதாரணங்களாக அமைந்து உள்ளன .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூகத்தினை அல்லது இனத்தினை அழித்தல் என்பது அவர்களை நேரடியாக தாக்குதல் என்பவற்றுக்கு அப்பால் அவர்களது மரபுரிமை களை அழித்தல் கூட இதன் பாற்பட்டதே. மரபுரிமை என்பது ஒரு சமூகம் அல்லது குழு தன் குழுமத்திடம் அல்லது சமூகத்திடம் பரம்பரை பரம் பரையாக கையளித்து வரும் அனைத்து விடயங்களும் மரபுரிமை ஆகும். இது அச்சமூகத்தின் நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் அடையாள மாக, அம்மக்களின் சமூக வரலாற்றை எடுத்துரைக்கும் முக்கிய சான்றா தாரங்களாக இருக்கக்கூடிய அனைத்து விடயங்களும் மரபுரிமைகளில் அடங்கும் .

அவ்வகையில் இக்கிராம சமூகத்திற்கே உரியதான தனித்துவமான பண்பாட்டு மரபுரிமைச் சொத்தாக இரு இந்துக் கோயில்களும் அமை வதுடன் பலம்வாய்ந்த நிறுவனங்களாக இயங்கிக் கொண்டிருப்பதால் இன்றுவரை பாரிய மதமாற்றங்களுக்கு உட்படாமல் இச்சமூகம் அமைந் துள்ளது. ஆனாலும் இந்தப் பிரதேசத்தில் இப் பண்பாடு மரபுரிமைகள் சார்ந்த வளங்களும், இயற்கை சார்ந்த பிரதேச வளங்களும் மிகத் திட்ட மிட்டு பல்வேறு சமூக அரசியல் காரணிகள் மூலமும் அழிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. எனவே ஒவ்வொரு தனி மனிதனது வாழ்க்கை யிலும் பங்கெடுத்துள்ள இவ்வாறான பண்பாட்டு மரபுரிமைகளைத் தொடர்ச்சியாகப் பயனுறுதி வாய்ந்ததாகப் பேணுவதுடன், அவற்றைப் பல்வேறு ஊடகங்களோடும் ஆவணப்படுத்தி அவற்றைப் பாதுகாத்தல் ஒவ்வொரு தனி மனிதரின் கடமையும் தேவையும் ஆகும்.

**Mrs Abiramy Uthayakumar (from UK)**
Master of Arts in Cultural Studies,
Master of Education,
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீரடி பாபா ஆலய குடமுழுக்கு



ஆலயத்தின் மூலவரினை கண்ணாடியில் தரிசித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆலய குடமுழுக்கன்று யாகசாலை முன்பாக பரத நாட்டிய அஞ்சலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் பாதம் போற்றுவோம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங்கை.

உலகில் முன்தோன்றிய மூத்த குடியினர் தமிழ் மக்கள். இவர்கள் பண்பாடும் நாகரீகமும் வளர்ந்தோடக் கடவுட் கொள்கையை ஏற்று செம்மை பெற்றவர்கள், பொன்னாலைப் பகுதியில் சித்தி விநாயகராகவும் வீற்றிருக்கும் எம்பெருமானும் மக்களுள் அகப்பட்ட கடவுள் ஆவார். தமிழினத்தின் துயர் நீக்கும் தயாபரனாகவும் வீற்றிருக்கின்றார். இன்று இவ் ஆலயம் காணுகின்ற மஹா கும்பாபிஷேகம் நாம் செய்த புண்ணியத்தின் பலனே.

மருதச் சூழலில் நெல் மணிகள் ஒலி எழுப்ப குளத்து நீரோசை சல சலக்க எம்பிரான் வழித்துணையாகப் பக்தர்களுக்கு இருப்பதால் வழிப் பிள்ளையார் எனவும் போற்றப்படுகின்றார். ஆலயத்தில் மேன்மைக்குப் பெரிதும் பறைசாற்றக் கூடிய வகையில், ஆலயப் பூசைகளும், பெருந் திருவிழாக்களும், நேரம் தவறாது நடைபெறுவது சான்றாகும். இதை விட வருடந்தோறும் பூசை ஆற்றும அந்தணப் பெருமக்களின் பூசைகளும், பக்தி பூர்வமான அர்ச்சகர்களின் பூசைகளும் மேலும் வளர்ச்சியை ஊட்டுகின்றன.

நல்ல குருநாதன் வாய்ப்பது நாம் செய்த புண்ணியத்தின் பலன் எனக்குக் குருநாதரான பண்டிதர் தி.பொன்னம்பலவானர் ஐயா அவர்கள் எனது தந்தையார் அ.முருகவேள் ஐயாவைப்போல் கிடைத்தமை எனது பலன் ஆகும். ஆலயத்தின் மண்டபத்திலே இருந்து எனக்குக் கற்பிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பொன்னாலை சித்தி விநாயகர் பேரருளே என்னைச் சைவப் புலவராகவும், பண்டிதரும் ஆக்கியது என்பது உண்மை.

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்வலம் செய்து கொள்ளும் தாழ் தடக்கை யாய் என்நோய்
பின்னவலம் செய்வதென் னோபேசு

இவ் உலகில் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற தத்து வத்தை உணர்த்தியவர் விநாயகப் பெருமான் ஆவார். உலகினைச் சுற்றி வருபவர்க்கே மாங்கனி என்று சிவபிரான் தனது புதல்வர்கள் இருவருக்கும் திருவாய் மலர்ந்தருளினார். முருகப் பெருமான் மயில் மீதே உலகைச் சுற்றி வந்தார். ஆனால் விநாயகப் பெருமான் அன்னை தந்தையே உலகென்று உலகினைச் சுற்றி வந்து, மாங்கனியைப் பெற்றுக் கொண்ட பெருமைக்கு உரியவர் ஆவார்.

அன்னை தந்தையில் உலகினைக் கண்டவர் - விநாயகர் உலகினில் அன்னை தந்தையால் கண்டவர் - முருகன் என்பதனூடாக,

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லை போய்
போகத் துயரம்போம் - நல்குண மதிக
மாமருகனைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியை கைதொழுதலக் கால்

கணபதி பெருமான், கணங்களுக்குத் தலைவன், தனக்கு மேல் தலைவன் இல்லையாதலால் விநாயகர் ஆவார். எம் விநாயகப் பெருமானைப் போற்றி வழிபட்டால் சங்கடங்களை நீக்குவார், துன்பம் நீங்கிய நல்வாழ்வு தருவார். விநாயகரை வணங்கச் சதுர்த்தி சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஜராத் மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தி அன்று இருபது அடி உயரத்தில் தேங்காய் போல் வடிவமைப்புச் செய்து வழிபடுவார்கள். அதாவது கடினமான ஓட்டினுள் தேங்காய் பருப்பு உள்ளது. ஓட்டை உடைத்து வெண்மையான பருப்பைக் காண்பது போல, எம் மனத்தினுள் அழுக்கு ஓட்டை உடைத்து பரம்பொருளைக் காணலாம் என்பது ஆகும். எனவே பரம்பொருளான விநாயகரை நாமும் கண்டு மேலும் பாரதியார் போற்றும் கணபதிப் பெருமானைக் காண்போம்.

எனவே நாம் அன்பினால் இறைவனின் திருவுருவைப் போற்ற வேண்டும். இறைவனை அடைவதே எங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். மனத் தூய்மையுடன் திருப்பாதங்களை வணங்கி இன்புற வேண்டும். சைவப் பெருவாழ்வு வாழ்ந்த திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞான சம்பந்த சுவாமிகள், சுந்தரமூர்த்தி நாயனார் வழியாக நாயன்மார்கள் விநாயக வணக்கத்தின் முக்கியத்துவத்தை போற்றினார்கள்.

நாமும் எல்லாம் வல்ல பொன்னாலை சித்தி விநாயகர் திருவடிகளைப் போற்றி அருள்பெற்ற இன்புறுவோமாக.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

**சைவப் புலவர்**
**பண்டிதர் மா.கணநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணச் சமய நிலை

(இத் தலைப்பில் நாவலர் பெருமான் எழுதிய பிரசுரத்தில் சில பகுதிகள்)

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள புரடொஸ்தான்து கிறிஸ்து சமயப் பாதிரிமார்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சிவன் கடவுளல்ல ரென்றும் அவர் பிசாசு என்றும் வேதாகமங்கள் பொய் நூலென்றும் சைவ சமயம் துர்மார்க்கமென்றும் சைவர்கள் அஞ்ஞானிகளென்றும் அவர்கள் பிசாசின் அடிமைகள் என்றும் பெருந் தூடணங்கள் பேசித் திரிந்து, குருட்டு வழி - மும்மூர்த்தி லட்சணம், துராகாரவிருந்தாந்தம் முதலிய பல தூடண புத்தகங்களை வெகுபணம் செலவிட்டு அச்சிற்பதிப்பித்து அவைகளை ஊர்தோறும் கொடுக்கும்படி சம்பளத்திற்கு உபதேசிமாரை நியமித்து விடுவாராயினார்கள்.

அவைகளினால் கொடுக்கப்படுவன சில மாத்திரமே. அவைகளும் வாசிக்கப் படுகின்றனவா? இல்லை, இல்லை பட்டங்களுக்கும் சித்திர வேலைகளுக்கும் பொருள் சேமித்தற்கும் பயன்படுத்தப்படுகின்றன. மற்றவைகளெல்லாவற் றையும் அவ்வுபதேசிமார்கள் கல்லுடன் கட்டிப் பாழ்ங் கிணறுகளிலே போட்டு விட்டு கொடுத்துவிட்டோம் என்று தெரிவிப்பாராயினர்.

*-----------*----------- *----------- *

பாதிரிகளுடைய பள்ளிக்கூடத்திலே இளமைப் பருவத்திலே கற்கப்புகுந் தவர்கள் அநேகர் சைவ சமயத் துண்மையை அறியாமையினாலே கிறிஸ்தவ மதத்திலே பிரவேசித்து விட்டார்கள். அவர்களிற் பலர் சைவ சமயத்து உண்மையை அறிந்த பின் பச்சாத்தாபம் அடைந்து சேது யாத்திரை முதலியன பண்ணி வெளிப்பட விபூதி தாரணம் அனுட்டானம் முதலியன செய்து வருகிறார்கள். சிலர் ஒரு சமயத்திலும் விசுவாசமின்றி எல்லாச் சமயமும் பொய்யென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கண்ணீர் பொழியப் பொழிய சிவன் பிசாசு என்றும் யேசு கிறிஸ்துவே இரக்ஷகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறிக் கதறித் திரிந்த எத்தனையோ உபதேசிமார்கள் இப்பொழுது குடும்பத்தோடு வெளிப்பட விபூதி தரித்து சிவதரிசனம் முதலிய செய்து கொண்டு திரிவதைக் காணாதவர் யாவர்?

*___________*___________ *___________ *

இந்தியாவிலே தாழ்ந்த சாதியாருள்ளும் ஒருவன் கிறிஸ்தவனாய்விடின் அவனுடைய மாதா, பிதா, சகோதரர் தாமும் அவனிடத்தாவது - அவனோடு கூட இருந்தாவது - அவன் காணவாவது போசனம் பண்ணுவதுமில்லை அவ னைத் தம் வீட்டில் சேர்ப்பதுமில்லை.

*___________*___________ *___________ *

சென்னை பட்டணத்தார்கள் சில வருடத்துக்கு முன் இங்கிலாந்துக் கவர்மெண்டுக்கு எழுதி அச்சுப்பதிப்பித்து அனுப்பிய ஒரு விண்ணப்பதிலே இலங்கையிலுள்ளவர்கள் ஆதியிலே இந்தியாவினின்றும் குடியேறிய மிகத் தாழ்ந்த சாதியார்களென்றும் அவர்களுக்கு யாதொரு சமயமும் இல்லை என்றும் அவர்களுக்குச் சமயமென்பது அங்கவஸ்திரம் போலும் என்றும் அதுபற்றி அவர்கள் தங்கள பிள்ளைகளுக்குப் பள்ளிக் கூடங்களிலே விவிலிய நூல் பாடம் படிப்பிக்க உடன்பட்டார்களென்றும் இந்தியாவிலுள்ளவர்களாகிய தாங்கள் பண்டுதொட்டு சாதியாசாரமும் சமயாசாரமும் வழுவாத உயர் குலத்தார்களென்றும் அதுபற்றி தாங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விவிலிய நூற்பாடம் படிப்பிக்க விடமாட்டார்க ளென்றும் எழுதியிருக்கிறார்கள்.

*___________*___________ *___________ *

யாழ்ப்பாணத்திலுள்ள சைவ சமயிகளே! உங்களிடத்து அன்பு மிகுதியி னாலே நாம் சொல்பவைகளைக் கேளுங்கள். நீங்கள் சிவதீட்சை பெற்றும் என்னை! விபூதி உருத்திராட்ச தாரணம் பஞ்சாட்சர செபம் சிவாலய தரி சனம் இவைகளை நியமமாகச் செய்தும் என்னை! அந்தியேட்டி சிராத்த முதலியவைகளைச் செய்தும் என்னை! வருடந்தோறும் கந்தப்புராணம் கேட்டும் என்னை! சிதம்பராலய தருமத்தின் பொருட்டு அளவு கடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்திகளைக் கொடுத்தும் என்னை! வருடத்துக்கு இரண்டு தரம் சிதம்பர யாத்திரை செய்தும் என்னை! சேது முதலிய புண்ணிய தீர்த்தங்க ளிலே ஸ்நானம் செய்தும் என்னை! ஊர்தோறும் கோயில் கட்டுவித்து பூசை, திருவிழாக்கள் செய்வித்தும் என்னை, சிவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகை, சுக்கிரவாரம் முதலிய விரதங்களினாலும் அங்கப் பிரதட்சனங்கங்களாலும் உடம்பை வருத்தியும் என்னை! நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களை யும் உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும் புண்ணிய பாவங்களையும் அவைகளின் பயன்களாகிய சுவர்க்க, நரகங்களை யும் சிவபெருமானை வழிபடும் முறைகளையும் அதனாலே பெறப் படும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும் கேட்டா யினும் அறிகின்றீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவை களைப் படிப்பிக்கின்றீர்களில்லை.....

இந்தியாவிலே சைவ சமயிகளுள்ளும் சைவ சமயத்தில் உட்பற்றில்லா தவர் பலரேயாகவும் இவ் யாழ்ப்பாணத்திலே கிறிஸ்துவ மதத்தில் புகுந் தவருள்ளும் சைவ சமயத்தில் உட்பற்றற்றவர் அரியராதலாகிய இத் துணை விசேடத்துக்கு காரணந்தான் என்னை எனில் கூறுதும். எத்துணை காலந் திருப்பித்திருப்பி படிப்பினுங் கேட்பினும் எட்டுணையும் தெவிட் டாது தித்தித்து அமுதூறும் அதியற்புத அதிமதுர திவ்விய வாக்காகிய கந்த புராணத்திலுள்ள பதிலக்கண திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித் தல்களினாலே இவர்கள் உள்ளத்து ஊற்றெடுத்த மெய்யுணர்வேயாம்.

இப்போதும் இருக்கிற ஒரு கிறிஸ்துவ சமய உபதேசியார் ஏறக் குறைய இருபத் தெட்டு வருடத்துக்கு முன்னர் நம்முள்ளே நால்வருடன் அந்த ரங்கத்தில் கலந்து பேசியபோது, "பைபில் வசனங்களெல்லாம் ஒருங்கு திரண்டும் கந்தபுராணத்து அவைபுகு படலத்திலும் அமைச்சியற் படலத் திலுமுள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களுள் ஒன்றனது, ஓரடிக்குத் தானும் ஆற்றாது ஆற்றாது என்ன அற்புதம் அற்புதம்" என்று கண்ணீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர உரோமஞ் சிலிர்ப்பமிக்க ஆற்றாமையோடு சொல்லினர். ஒரு கிறிஸ்தவர் ஏறக்குறைய நாற்பது வருடத்துக்கு முன் ஒரு நாள் கிறித்து மதப் பிரசங்கம் செய்த போது "பதிலக்கணம் பைபிலிலே எங்கே சொல்லியிருக்கிறது. சைவருடைய சிவஞானசித்தியாரைப் பார்த்தாலன்றே பதிலக் கணம் இனிது விளங்கும்" என்று பாதிரிமாருடைய நெஞ்சம் பட்டெனத் தம் வசமிழந்து சொல்லியமையும் பின்பு அவரைப் பாதிரிமார் ஓரறையில் கொண்டு போய் இருத்திக் கண்டிக்க அவர் "நான் என் மனச் சான்றுக்கு விரோதமாய்ப் பொய் பேசும்படி சொல்கிறீர்களோ" என்று மேசையில் அறைந்து ஆரவாரித்தமையும் பலரும் அறிகுவர் அறிகுவர்......"



இளமையில் திருந்தாவதன் முதுமையில் தள்ளாடுவான்.

சிந்திக்கத் தெரிந்தால் நிந்திக்க இயலாது.

கடவுளைப் போல் பிறர் குற்றங்களை மன்னிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை நாயன்மார் மகிமை

பெரியபுராணத்திலே சொல்லப்பட்ட ஆறுபத்து மூன்று நாயன்மார்கள் திருவவதாரஞ்செய்தற்கு முன்னரே அவர்களுடைய சரித்திரம் பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே ஒன்பதாம் அமிசத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனஞ் சொல்லியருளினவர் எல்லாவறிவும் எல்லா முதன்மையும் எல்லாவநுக்கிரகமுடைய பரமபதியாகிய சிவபெருமானே, அதனைக் கேட்டவர் அவருடைய அருட்சக்தியும் உலகமாதாவுமாகிய பார்வதி தேவியாரே.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய்த் திருவவதாரஞ் செய்து மற்றைய நாயன்மாரைத் துதித்துத் திருத்தொண்டர் தொகை பாடியருளினவர்; சிவபெருமானுடைய பிரதி விம்பமாய்த் தோன்றியவரும், பிரம்ம விட்டுணுக்களாலும் அணுக்கலாற்றாத ஆலகாலவிஷத்தைத் தமது உள்ளங்கையிற் கொண்டவருமாகிய ஆலாலசுந்தரரே. அவருக்குத் திருத்தொண்டத்தொகை பாடும் பொருட்டு அடியெடுத்துக் கொடுத்தருளினவர் வன்மீகநாதராகிய சிவபெருமான்.

அச் சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானால் அனுப்பியருளப்பட்ட வெள்ளை யானை மேற்கொண்டு பிரமவிட்டுணுக்கள் முதலாயினோர் சேவிப்பத் திருக்கைலாசமலையை அடையும்பொழுது அவரைத் தூரத்தே வணங்கி அவருடைய சரித்திரத்தையும் அவருடைய திருத்தொண்டத் தொகையிலே துதிக்கப்பட்ட மற்றைய நாயன்மார்களுடைய சரித்திரத் தையும் இருடிகளுக்குச் சொல்லியருளினவர், சிவபெருமான். சிதம்பரத் திலே கனகசபையிலே எல்லாருக்கும் ஆனந்தநிருத்தத் திருத்தாண்டவத் தைத் தரிசிப்பித்தற்கு மூலகாரணமாயுள்ள வியாக்கிரபாத மகாமுனிவருடைய திருக்குமாரரும் சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற் கடலை உண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவதீட்சை செய்து சிவபூசை யெழுந்தருளப் பண்ணிக் கொடுத்த சைவாசாரியருமாகிய உபமன்னியு மகாமுனிவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைத் திருவந்தாதியாகப் பாடும்பொருட்டு நம்பியாண்டார் நம்பிக்குத் திருத்தொண்டத் தொகை யின் பொருளை அருளிச் செய்தவர் திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் விநாயகக் கடவுளே.

அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைப் பெரிய புராண மாகச் செய்யும்பொருட்டு, தில்லைவாழ்ந்தணர் மூவாயிரவரும், எழுநூறு திரு மடத்து முதலிகளும், மாகேசுரர் நாற்பத்தெண்ணாயிரவரும் திருக் கோயிற்றிருத் தொண்டு செய்யுந் திருவடியார் ஏழாயிரத்துத் தொளாயிர வருங் கேட்கும்படி, கனகசபையிலே சேக்கிழார் நாயனாருக்கு அடியெடுத் துக் கொடுத்தருளினவர் சபாநாயகரே. அப் பெரியபுராணத்தைக் கேட்கும் பொருட்டு அநபாய சோழ மகாராசாவுக்கு எல்லாருங் கேட்க ஆஞ்ஞாபித் தருளினவரும் அச் சபாநாயகரே.

பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனார் மீது புராணஞ் செய் தருளினவரும், பெரிய புராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர் புராண சாரஞ் செய்தருளியவரும் தில்லைவாழந்தணர்களுள் ஒருவராயும், சபா நாயகர் விடுத்தருளிய "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றக் - குடியாற் கெழுதியுகைச் சீட்டுப் படியின்மீசைப் பெற்றுச் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து - முத்தி கொடுக்க முறை" என்னுந் திருமுகத் தைப் பெற்றுக்கொண்டு பெற்றான் சாம்பானுக்கு உடனே முத்திகொடுத் தருளியவராயும், அப் பெற்றான் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங் காண அதனுண்மையை வெளிப்படுத்த அவர்கள் ஐயத்தை ஒழித்தற்பொருட்டு முள்ளிச்செடிக்கு முத்திகொடுத்தருளினவரா யும் உள்ளவர் உமாபதி சிவாசாரியாரே.

இவைகளெல்லாம் இப்படியிருக்க, இக்காலத்து ஸ்மார்த்தப் பிரா மணருள்ளே பலர் அவ்வறுபத்து மூன்று நாயன்மாரை வழிபட மறுக் கின்றார்கள். அவர்களுடை உற்சவங்களிலே தமிழ் வேத பாராயணஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாது மறுக்கின்றார்கள். அவர்களுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவு அதிபாதகம். அநபாய சோழமகாராஜா பெரிய புராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாரை யானை மீதேற்றித் தாமே வெண்சாமரம் வீச நகர் வலஞ் செய்து கொண்டு வந்தார்கள் என்று உமா பதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணத்திற் கூறியிருக்கின்றாரே. அங்ஙன மாகவும், அப் பெரியபுராணத்திற் கூறப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார் களுடைய உற்சவங்களிலே தமிழ் வேதபாராயணஞ் செய்யலாகாதென்று சிறிதும் பழி பாவங்கட்கு அஞ்சாது பிதற்றுதல் எவ்வளவோரறியாமை!

இவ்வுண்மையை அறியாமையினாலும், அறிந்தவழியும், தங்களுக்கு முனிவர்களாலே கிடைத்த சாபத்தினாலும், அச் சிவாகமங்களையும் சைவ சமய தாபகர்களாய்ச் சிவமாந் தன்மைப் பெரும்பேறு பெற்ற உண்மை நாயன்மார்களையும் அவர்கள் உலகமுய்யும் பொருட்டு அருளிச் செய்த தமிழ்வேதம் முதலியவற்றையும் நிந்திக்கும் ஸ்மார்த்தர்களை, அச்சிவாக மங்கள் உண்மை நூல்களெனக் கொண்டு அவற்றின் வழி ஒழுகப் புகுந்த நீங்கள், யாவர்களாகக் கொண்டு ஒழுகல் வேண்டும். இதனை நன்றாக ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்தினுஞ் சாதி அதிகமெனக் கொள் வது சுருதி யுத்தி அனுபவ மூன்றுக்கும் முழுமையும் விரோதம், உலகத் துச் சாதிபேதம் போலச் சற்சமயமாகிய சைவ சமயத்தினும் முதற் சாதி இரண்டாஞ்சாதி, மூன்றாஞ் சாதி, நாலாஞ் சாதி, நீசசாதி யெனச் சமய நடைபற்றி ஐந்து சாதி கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்கு பாத முறைப்படி வழுவற நடந்து சிவானந்தப் பெரும்பேறு பெற்ற சீவன் முத்தர் சிவமேயாவர். இனிச் சிவஞானிகள் முதற்சாதி, சிவ யோகி கள் இரண்டாஞ் சாதி, சிவக்கிரியாவான்கள் மூன்றாஞ்சாதி, சிவாச்சாரி யாவான்கள் நாலாஞ் சாதி, இந்நெறிகளில் வாராதவர்களும், இந்நெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே முறை பிறழ்ந்து நடக்கின்றவர்களும் இந்த நடைகளை விட்ட பதிதர்களும், சதாசூதகிகளாகிய பஞ்சமசாதி, சிவசரியை, கிரியை முதலியவைகளினாலே பொருள் தேடி உடம்பை வளர்ப்பவர்களும், கோயிலதிகாரிகளாகித் தேவத்திரவியத்தைப் புசிப்பவர்களும், விருத்திப் பொருட்டு ஆசாரியாபிஷேகம் முதலியன செய்துடையோர்களும், விருத்திப் பொருட்டுச் சிவ வேடந்தரித்தவர்களும், விருத்திப் பொருட்டுத் துறவறம் பூண்டோர்களும், சிவஞான நூல்களைச் சொல்லிப் பொருள் வாங்கி வயிறு வளர்ப்பவர்களும் பிறரும் பதிதர்களுள் அடங்குவார்கள்.

இங்கே சொல்லிய முறையன்றி, சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளிய குருவு லிங்க சங்கம மென்னும் மூன்றிடத்தும் ஆசையும் பணிவும் வழிபாடும், கொடையும், அடிமைத் திறமும், உரிமையுடமுடையவர்கள் எந்தக் கருமஞ் செய்தாலும் முதற்சாதி யெனக் கொள்ளப்படுவார்கள். அத்துவ சுத்தி செய்யப்பட்டுச் சிவஞான நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங் களை ஓதி அவைகளின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த உயிரிலே சிவாசனமூர்த்தி முதலியன நியசித்து அபிடேகம் பண்ணப்பட்டவரே சற்குரு. தேகாதிப் பிரபஞ்சத்தை விடுத்துச் சிவசம்பந்தமுற்றோரே சங்கமம் சிவஞானிகள் பாவனையுற்றதே சிவலிங்கம்.

யாவரும் தமக்கு மேன்மேற் சமயிகளைத் தரிசித்து வணங்கிப் பணி செய்தலும், கீழ்க்கீழ்ச் சமயிகளை நோக்கி இவர்களில் வளவில் வந் தார்களே என்று இரங்கி, விதித்தன சொல்லி, விலக்கியன ஒழிவித்தலுமே நீதி. இப்படியன்றி ஒருவருக்கொருவர் கலாம் விளைத்தல் நீதிகேடு. தத்துவாதீத சொரூப சிவப்பேறுடையவரை ஈச சதாசிவ சார்ந்த பதிப் பேறுடையவர் வணங்கி வழிபடல் வேண்டும். இவ் விருதிறத்தாரையும் கந்த சண்ட கணா தீச பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல் வேண்டும். இம்மூன்று திறத் தாரையும் வசுருத்திராதித்து பதப்பேறுடையவர் வணங்கி வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படல் வேண்டும். இந்நான்கு திறத்தாரையும் இவரிற்றாழ்ந்த பிராகிருதர் வணங்கி வழிபடல் வேண்டும். மேலோர்களாயுள்ள ஈச, சதாசிவ, சாந்த பதப்பேறுடையவர்களும் கந்த சண்ட கணாதீச பதப்பேறுடையவர்களு மாகிய சைவர்கள் கீழோர்களாகிய வசுருத்தி ராதித்த பதப்பேறுடை யவர்களாகிய ஸ்மார்த்தர்களை வணங்குதலும் அவர்களைச் சிரார்த்தம் முதலியவற்றில் வரித்துப் பூசித்தலும் நீதியா! இதை சிந்தியுங்கள்.

சைவசமயிகளே, நீங்கள் இவ்வுண்மைகளெல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்தறிந்து, சிவபெருமானிடத்தும் உண்மை நாயன்மாரிடத்தும் சிவா கமவிதிப்படி பத்தி செய்தொழுகக்கடவீர்கள். இவ்வுண்மை நிலைக்கு மறு தலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டிரங்கி அவர்களு க்கு நல்ல றிவுச்சுடர் கொளுத்தக் கடவீர்கள். அது கூடாதாயின், அவர்கள் செய்யும் சிவாகமநிந்தை குருநிந்தை சங்கமநிந்தை முதலியவற்றைக் கேட்டு எரி வாய் நரகத்துக்கு இரையாகாவண்ணம் அவர்கள் கூட்டத்தை ஒழித்துவிடக் கடவீர்கள். இப்படிச் செய்யாது மதிமயங்கி அவ்வதிபாதகர்களைப் பெரி யோர்களெனக் கொண்டு வழிபட்டொழுகுவது பாவம்! பாவம்!

திருச்சிற்றம்பலம்



புலன்களால் பெறும் மகிழ்ச்சியைவிட மேலான மகிழ்ச்சிகளை காட்டும்படி இறைவனிடம் வேண்டுங்கள்.

பெருமை, கோபம், வீண் மயக்கம் என்பனவே மனித வர்க்கத்தின் விரோதிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருமார் ஆசியுரை



இடமிருந்து முதலாவதாக இருப்பவர் பிரதமகுரு சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள்



சிவஸ்ரீ ஜெகதீஸ்வரன் ஐயா அவர்கள் நன்றியுரை வழங்கியபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடப்பள்ளி (உட்புறம்) புதிய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபூசை

சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்றும், வேதமுஞ் சிவாகமுமே அவர் அருளிச் செய்த முதனூல்கள் என்றும், அவற்றுள் வேதம் பொது நூல் சிவாகமம் சிறப்பு நூல் என்றும், விபூதி, ருத்திராக்ஷங்களே, சிவசின்னங்கள் என்றும், ஸ்ரீ பஞ்சாக்ஷரமே சிவமூலமந்திரம் என்றும், சிவலிங்க உபாசனையே சிவபிரானுக்குச் செய்யப்படும் மிகமேலாகிய வழிபாடு என்றும், விபூதி ருத்ராக்ஷதாரணமும் ஸ்ரீபஞ்சாக்ஷரஜபமும் சிவலிங்கோபாசனயும் வேதத்தில் விதிக்கப்படினும் சிவாகமத்தில் விதிப்படி சிவதீக்ஷை பெற்றுக் கொண்டு அநுட்டிக்கப்பட்டாலன்றி முத்தி சித்தியாது என்றும் விசுவாசித்து, அங்ஙனம் விசுவாசித்தபடியே ஒழுகும் மார்க்கம் சைவசமய மெனப்படும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களாலும், மாணிக்கவாசக சுவாமிகளாலும், பொரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாராலும் சைவசித்தாந்த சாத்திரோபதேசஞ் செய்தருளிய திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவர்களாகிய மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியார், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்னும் நால்வர்களாலுமே தமிழ் நாடெங்கும் சைவ சமயம் தழைத்தோங்கியது.

ஆதலினாலே, சைவசமயிகள் யாவரும் அவ்வுண்மை நாயன்மார்களுக்கு விதிப்படி சிரத்தையோடு குருபூசை நடத்தல் வேண்டும்.

அந் நாயன்மார்களெல்லாருக்கும் குருபூசை செய்யச் சக்தியில்லாதவர்கள், அவர்களுள்ளே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சமய குரவர்கள் நால்வருக்கும், சேக்கிழார் நாயனாரும், மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர்கள் நால்வருமாகிய ஒன்பதின்மருக்கு மாத்திரமாயினும் குருபூசை செய்வது அத்தியாவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபூசை செய்தற்குப் பொருளில்லாதவர்கள் தங்களாலியன்ற பதார்த் தம் யாதாயினுங் கொண்டு போய்க் குருபூசை நடக்குந் தானத்திற் சேர்த் தல் வேண்டும். அதுவுங் கூடாதாயிற் கறிதிருத்துதல் முதலிய கைத் தொண்டுகளேனுஞ் செய்தல் வேண்டும்.

**இனிக் குருபூசைக் கிரமமாமாறு :**

அந்த அந்த நாயனாருக்கு, அவரவர் முத்திபெற்ற திருக்ஷத்திரத்திலே, திருக்கோயிலிலே விசேஷ பூசையும் வேதபாராயணம் தேவார பாரா யணங்களோடு உற்சவமும் செய்வித்தல் வேண்டும். திருமடத்திலாயி னும், தங்கள் தங்கள் வீடுகளிலாயினும், சமய தீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், நிருவாணதீக்ஷிதர், ஆசாரியர் என்று நால்வகை மாகேசுரர்களையும் தூரத்தே கண்டவுடனே சிரசின்மீது அஞ்சலி செய்து விரைந்தெதிர் கொண்டு அழைத்து வந்து, அவர்களுடைய திருவடிகளைத் தீர்த்தத்தி னால் விளக்கி அத் தீர்த்தத்தைச் சிரமேற்றெளித்து, அவர்களைப் பந்தியாக இருத்தி ஓதுவார்கள் தேவாரம் ஓத, அன்னம் கறி முதலியவற்றைப் படைத்து, அவ்வடியார்களை அத்திருநக்ஷத்திரத்திலே முத்தி பெற்ற நாயனாராகப் பாவித்து, பத்திர புஷ்பங்களால் அருச்சனை செய்து, தூப தீபங் கொடுத்து,கர்ப்பூரராத்திரிகம் பணி மாறப்பண்ணி, மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, திருவ முது செய்வித்தல் வேண்டும்.

குருபூசை செய்பவர்களும். செய்விப்பவர்களும், குருபூசையிலே அருச்சனை யேற்று அமுது செய்யப்புகும் மகேசுவரர்களும், அத் தினத்திலே குருபூசைக்கு முன்னே யாதொன்றும் புசிக்கலாகாது. அன்றிரவிலே பசித்த தாயினும், அன்னம் புசியாது பால் பழம் முதலியவற்றில் இயன்றது உட் கொண்டு சுத்தர்களாகிய சிவபெருமானையே சிந்தித்துக் கொண்டு நித்திரை செய்தல் வேண்டும்.

வைதிகப் பிராமணர் ஆயிரம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் சமய தீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் விசேஷ தீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதீகப் பிராமணர் லக்ஷம்பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் நிருவாண தீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப் பிரா மணர் கோடி பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் சைவாசாரியார் ஒரு வருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வேதாந்த மகாவாக்கியத்தை அறிந்த கோடி வைதிகப் பிராமண சந்நியாசிகள் கூடினும், நிருவாண தீக்ஷை பெற்றுக் கொண்டு சைவசித்தாந்த நூல்களாகிய சிவஞான நூல் களை ஓதிப் பதி, பசு, பாச மென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை அறிந்த ஒரு சைவருக்குச் சமமாகார்கள், இது சிவவாக்கிய சிவாகம நூற்றுணிவு.

வாயுசங்கிதை :- சைவநூலிற் கூறப்பட்டதும் பாசமூன்றையுந் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்ஷையைத் தவிர, வேறு யாதொரு ஆச்சிரமும் இவ் வுலகத்திலே மனிதருக்கு மேன்மையன்று. ஆதலால் தீக்ஷையினாற்றான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும் மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷ மில்லை. அத்துவசுத்தியின்றி மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷமில்லை. அத்துவசுத்தியின்றி முத்தியை விரும்பும் மனிதர் கோலின்றி நடக்கத் தொடங்கிய குருடர் போல்வர்; தோணியின்றிக் கடலைக் கடக்க விரும்பி னவர் போல"

காந்தம் பிருகுசாபப் பிரகரணம் : "இங்கே முப்பாசத்தை அகற்றுவதும் மேலானதும் சிவசம்பந்தமுடையதுமாகிய தீக்ஷையாலன்றி ஆன்மாக் களுக்கு ஆச்சிரமத்தாற் செய்யப்பட்ட உயர்ச்சி யொன்றுமில்லை. ஆதலிற்றீக்ஷையாலே முத்தி, ஆச்சிரமங்களாலும் பிறகருமங்களாலும் முத்தி யில்லை"

இவ்வுண்மையைச் சிறிதும் நோக்காது சைவசமயிகளுள் அநேகர் ஆதிசைவர் முதலிய சைவர்களை அவமதித்துத் தள்ளிவிட்டு, அதீக்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்களாய்ச் சிவாகம நிந்தகர்களாய்ச் சைவசமய தாபக நிந்தகர்களாய்த் தமிழ் வேத நிந்தகர்களாய் அன்னிய மதத்தவர்களாயுள்ள ஸ்மார்த்தப் பிராமணர்களையே சற்பாத்திரமென நன்கு மதித்து அவர்களுக்கு அன்ன தானம் முதலியன செய்தலே புண்ணியமென்று மயங்குகின்றார்களே, ஐயையோ இஃதெவ்வளவு பெருங் கொடும் பாவம்!!!



அறநெறிபற்றிப் பேசுவதைவிட நடப்பதே பயன்தரும்.

அனுபவம் என்ற பள்ளியில் முட்டாள்கள் படிப்பதில்லை.

எல்லா விடயங்களிலும் நல்ல அம்சத்தையே காண்க.

மனிதன் கடவுளை அடைய நொண்டி போலவும், நரகத்தை அடைய குரங்கு போலவும் செயற்படுகின்றான்.

தர்மத்திலிருந்து விலகுவதற்கேற்ப கடவுட்காட்சியும் விலகும்.

உண்மை வழியில் நடப்பதே வெற்றிக்கு நம்பிக்கை.

கோபம். பழி வாங்கும் உணர்ச்சிகளுக்குப் பயன் கொடுமையே.

சிந்திக்காமல் படிப்பது வீண், படிக்காமல் சிந்திப்பது ஆபத்து.

பயன் கருதிப் பழகுபவருடன், நட்புக் கொள்ளக் கூடாது.

பிறருடைய மகிழ்ச்சியில் மகிழ்ச்சியடைவதே உண்மையான வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தின் வடகிழக்கிலுள்ள பூந்தோட்டம்



தென்கிழக்கு மூலையில் இருந்து மடப்பள்ளியுடன்
ஆலயத்தின் வெளிப்புறத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய தீட்சை

சமய தீட்சை என்பது ஒவ்வொரு சைவ சமயியும் இளமையில் ஏழு அல்லது ஒன்பது வயதிலே குருவிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய சமயச் சடங்காகும்.

விசேட தீட்சை - நிர்வாண தீட்சை ஆசாரிய அபிடேகம் என்னும் தீட்சைகளுக்கு பலவித தகுதிகளும் விடேச அறிவும் பயிற்சிகளும் அவசியம். இவையின்றி இத்தீட்சைகளைப் பெறலாகாது. ஆனால் சமய தீட்சை என்பது ஒவ்வொரு சைவ சமயிக்கும் அவசியமாகும்.

இலங்கையில் பிறந்த ஒவ்வொரு பிரசையும் இலங்கைப் பிரசை என்பது உறுதியேயாகும் என்றாலும் குறிப்பிட்ட வயதில் முறைப்படி தேசிய அடையாள அட்டை பெறுவது அவசியம். அப்படிப் பெறாவிட் டால் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டி வரும். பெற்ற அடையாள அட்டையைப் பத்திரமாகப் பேணாது தொலைத்து விட்டாலும் அவதிப்பட வேண்டி வரும். இதேபோலத்தான் சமயதீட்சையும், சமய தீட்சை பெறவிட்டால் முறைப் படி விரதம் அனுட்டிக்கவோ- ஆலய உபயங்களில் தருப்பை அணிந்து சங்கற்பத்துடன் ஈடுபடவோ இயலாது. இதுமட்டுமன்றி சமய தீட்சை பெறாதவருக்கு திருமணச்சடங்கு- மரணத்தின்பின் செய்ய வேண்டிய இறுதிச் சடங்கு என்பவற்றிற்கு சைவசமயச் சட்டரீதியான உரிமை கிடையாது. சமய தீட்சை பெறாது இவற்றைச் செய்வது : அவசியமான விடயங்களைத் தெரிவிக்க வேண்டிக் கடிதமெழுதிய ஒருவர் விலாசமிடாது தபாற்பெட்டியில் இடுவது போலும் என்று ஒரு பெரியார் கூறியுள்ளார்.

சமய தீட்சை பெற்ற ஒருவர் தினமும் சைவ அனுட்டானத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். ஓரிரு தினங்கள் தவறவிட்டால் அதனைத் தொடர வழி முறைகள் உண்டு. தொடர்ந்து 15 தினங்கள் தவறவிட்டால் மீண்டும் புதிதாகத் தீட்சை பெறவேண்டும் என்ற ஒரு விதியுண்டு. இது தேசிய அடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாள அட்டையை தொலைத்தவர் மீண்டும் புதிதாகப் பெறவேண்டும் என்பதைப் போன்றது.

இது மட்டுமன்றி சமய தீட்சை விடயமாக வேறொரு வற்புறுத்தலும் உண்டு. ஆலயங்களில் தொண்டுகள் செய்வோர் சமய தீட்சை பெற்ற-வராக இருக்க வேண்டும் என்பதாகும்.

சைவாலயங்களில் திருவிழாக் காலங்களிலும் கும்பாபிஷேக கருமங்க ளிலும் உதவி செய்ய வருபவர் தொண்டு செய்பவர் தீட்சை பெற்றவராகவே இருத்தல் வேண்டும். தீட்சை பெறாதவர் உதவுதல் பங்கு பற்றுதல் தொண்டு செய்தல் என்பன, திருவிழா - கும்பாபிஷேகங்களை நடாத்தி அனுபவப்பட்ட ஒருவர் நல்ல முறையில் திட்டமிட்டு முன்மாதிரியாக எப்படிச் செயற்பட வேண்டுமென ஒரு புத்தகம் வெளியிட் டிருக்கிறார். அப்புத்தகத்தில் அவர் கும்பாபிஷேக ஆரம்பத்தில் அதில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் சமய தீட்சை வைத்துவிட்டால் தீட்சை இல்லாதவர் கலத்தல் என்ற குறை தீரும் என்று குறிப்பிட்டுள்ளார். தீட்சை பெற்று 15 நாட்கள் அனுட்டானம் செய்யாதுவிட்டவர்கள் மீண்டும் தீட்சை பெற வேண்டும் என்ற விதியைப் பேணும் வகையில் கும்பாபிஷேக ஆரம்பத்தில் மீண்டும் மீண்டும் தீட்சை வைப்பது தவறா காது. இல்லையேல் தீட்சை பெற்றவர் சிரமத்தைப் பாராட்டாது தீட்சையின் பெருமையைப் பேணிச் சிறப் படையும் தன்மையில் தினம் ஒருவேளை அனுட்டானம் செய்தல் முறை.

சமய தீட்சை பெறும் ஒருவர் 1+5+6+3= 15 மந்திரங்களை சில முடிபு களுடன் அப்பியாசிக்கும் வாய்ப்பினையும் மந்திர பூர்வமான சில சடங்கு களைச் செய்யும் சந்தர்ப்பங்களையும் பெறுவர். இப்படித் தொடர்ந்து செய்யும்போது உண்மையான சில வளர்ச்சியையும் தகுதியையும் தன்னை அறியாமலே அடைவர். கொலை, மது, மாமிசம் முதலா னவற்றையே தொழிலாகக் கொண்டு வாழ்பவர். மந்திரங்களையும் மந்திரத் தொடர்புடனும் செய்யும் செயல்களைச் செய்யவும் பயன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையவும் இயலா நிலையில் இருப்பர். இப்படிப்பட்டவரும் கூட மந்திரம் கிரியைகள் தொடர்பில்லாத சமய தீட்சை பெறவேண்டும் என நம் சாத்திரங்கள் வற்புறுத்துகின்றன. எனவே அரிய மனிதப் பிறவியையும் சிறந்த சமயத்தையும் இயல்பாக அடைந்தவர்கள் சமய தீட்சை பெறுவ திலும் அதனைப் பேணுவதிலும் கவனமெடுப்பது புத்திசாலித்தனமும் புண்ணியமும் உடைய தன்மையாகும். சமய தீட்சை பெறும்போது மந்திரம் சொல்லித் திருநீறு தரித்தல், மந்திரம் சொல்லி சிவபெருமானுக்கும் சூரியன் முதலான தேவர்க்கும் புனித நீரை அர்ப்பணித்தல் மந்திர செபம் செய்தல் என்பவற்றுக்கு வேண்டிய உரிமையினையும் பயிற்சியினையும் ஒருவர் பெறுகின்றார். இப்படிப் பெறும் புனிதச் சடங்கினைத் தூய புண்ணிய காலத்தில் பெற வேண்டும் என்ற விதி உள்ளது.

இப்புண்ணிய காலத்தையும் சிவ புண்ணியப் பேற்றையும் பின்பற்றும் அடிப்படையில் சில சைவ நிறுவனங்கள் - ஆதீனங்கள் மடங்கள் - சைவப் பாடசாலைகள் - சைவ ஆலயங்கள் வருடம் தோறும் வரும் சிவபுண்ணிய காலங்களைத் தமக்குரிய தீட்சைத் தினங்களாக கொண்டு சிவப்பணி புரிந்ததை அறிய முடிகிறது. இந்த அடிப்படையில் கார்த்திகைத் திங்கள் - ஐப்பசி வெள்ளி - மகா சிவராத்திரி தினம் என்பன பலரால் தீட்சைத் தினங்களாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்படியான தினங்களில் சமய தீட்சை பெறுவது அப்போது பஞ்சாட்சர உபதேசம் பெறுவது, பெரும் பயன்தரும். இந்த அடிப்படையில் வருடம் தோறும் வரும் மிக உயர் சிவ புண்ணிய காலமாகிய மகாசிவராத்திரி தினத்தைத் தீட்சைத் தினமாகக் கொண்டு தீட்சை பெறுவது, மிகப் பெறும் பேறாக வாய்த்தது, நம் தமக்கு ஈதோர் பிறவி, என்று அப்பர் சுவாமிகள் கூறியருளியதைப் போற்றிப் பேணி சைவ சமயியாகப் பிறந்த பயனைப் பேணுவதாயிருக்கும்.

**பண்டிதர் : தி. பொன்னம்பலவாணர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசௌசம் எனும் துடக்கு

ஒருவரின் பிறப்பு - இறப்பு தொடர்பாக உறவினர் புனித கருமங்களில் விலகும்படி தடுக்கும் விடயமே ஆசௌசம் எனப்படுகின்றது.

பிறப்பு இறப்பு தொடர்பான ஆசௌசத்திற்கும் பிதிரர் எனும் தேவச் சாதியருக்கும் தொடர்புண்டு.

மனிதன் தாயின் கருவில் வளர்வதற்கும் பின் பிறத்தற்கும் தேவர் முனிவர் பிதிரர் என்னும் மூன்று பிரிவினரின் உதவியும் ஆதரவும் இன்றி யமையாததாகும்.

இப்பிதிரரின் தொடர்பைப் பேணுவதற்கு ஆசௌசம் எனும் துடக்கு வலியுறுத்தப்படுகின்றது போலும். இப்படியான துடக்குக் காலத்தில் புனித மான செயல்களையும் ஆலய வழிபாட்டையும் விலக்க வேண்டியிருக்கி றது.

துடக்கு முடிகிற காலத்தில் மந்திரபூர்வமான செயல்களால் துடக்கு கழிக்கப்படுகின்றது. மந்திர பூர்வமாகத் துடக்கு நீக்கப்பட்ட பின் ஆலய வழிபாடு போன்ற புனித கருமங்களைத் தொடர வேண்டும்.

ஒருவரின் மரணத்தால் உண்டான துடக்கு அந்தியேட்டியின்போது 16ம் நாளிலோ 30ம் நாளிலோ கழிக்கப்படுகின்றது. இப்படிக் கழிக்கப்பட்ட பின் ஆலய வழிபாடு போன்ற வழக்கமான புனித செயல்கள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

இக்காலத்தில் மிகப் பலர் அந்தியேட்டியின்போது துடக்குக் கழிக்கப் பட்டாலும் ஒருவருடத்துக்கு ஆலய வழிபாட்டை விலக்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்த யாத்திரை செய்தல் - திருவிழா - கும்பாபிஷேகம் போன்ற வற்றில் சங்கற்ப பூர்வமாகச் செயற்படுதல் போன்றவற்றை ஒரு வருடத் துக்கு விலக்கும் படி விதியுள்ளது. ஆனால் ஆலய வழிபாட்டைச் செய்தலோ திருவிழா - கும்பாபிஷேகம் போன்றவற்றைத் தரிசித்தலோ விலக்கப்படவில்லை. இப்படி ஒரு வருடத்துக்கு விலக்கப்பட்டமையும் இறந்தவருக்குக் கொள்ளி வைத்து கடமை செய்த ஒருவக்கேயன்றி அக் குடும்பத்தவருக்கு விலக்கப்படவில்லை.

ஆனால், இக்காலத்தில் பலர் குடும்பத்தவர் - உறவினர்களுக்கும் ஒரு-வருடத்துக்குக் கோவிலுக்குப் போகாமலும் திருவிழா - கும்பாபிஷேகம் போன்றவற்றைத் தரிசிக்காமலும் விலக்கி விடுகின்றனர்.

இப்படி விலக்குவது பெரும் தவறும் தீமையும் ஆகும். ஆசௌசம் தொடர்பான சாத்திரங்களில் உள்ள ஆசௌசத்தைக் காக்காது விடுவதும் இல்லாத ஆசௌசத்தைக் காப்பதும் பெரும் தீமை என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் இவ்வுண்மை தெரிந்தவரால் தெரிவிக்கப்பட்டபோதும் பலர் வழக்கமாக உள்ளதைப் பேண வேண்டும் என புனித கருமங்களை விலக்கி விடுகின்றனர். இது பெரும் தீமைக்கும் நட்டத்திற்கும் வழி வகுக்கின்றது. புண்ணியத்தையும் புனிதத்தையும் அதிகரிக்கச் செய்து நன்மையை விருத்தி செய்யத்தக்க செயலைப் புறக் கணிப்பதால் பாபமும் பாபப் பயனான துன்பங்களும் அதிகரிக்கும் வாய்ப்பு அதிகரிக்கின்றது.

ஆலய வழிபாடு திருவிழா, கும்பாபிஷேகம் போன்றவற்றில் பங்கு கொள்வதால் கிடைக்கும் நன்மையின் சிறப்பை நன்கு அறிந்தவர் போலியான துடக்கைப் பேணமாட்டார் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானம்

தானத்துக்கு வரையறையான ஒரு இலக்கணம் உண்டு. உரிய தகுதி வாய்ந்த ஒருவரை வரவழைத்துச் செய்யும் கொடையே தானம் எனப்படும். ஏதும் தேவை கருதி வந்தவருக்குத் தகுதி நோக்காது கொடுப்பது தருமம் எனப்படும். அபரக் கிரியைகளின்போது செய்யப்பெறும் இடப தானம் சோத கும்பதானம் முதலாகிய தானங்களைச் செய்யும்போது ஏற்பவருடைய தகுதி கண்டிப்பாக அவதானித்தே செய்தல் வேண்டும். உரிய தகுதியுள்ளோர் கிடைக்காத பட்சத்தில் ஒரு தர்ப்பையை வைத்து ஆசாரிய லட்சணம் வாய்ந்த ஒரு நற்புரோகிதராக அல்லது தாம் வழி படும் ஒரு ஆலய மூர்த்தியாகப் பாவித்து, தியானித்துத் தம் இயல்புக்கேற்ற முறையில் வழிபட்டு தானத் திரவியங்களை அதன் முன் படைத்து நேர்த்தி செய்து கொண்டு, அத்திரவியங்களைக் கோயிலுக்கே கொடுத்து விட வேண்டும் என்னும் விதியுமுண்டு. தானம் என்பதைத் தகுதியற்ற வர் கையிற் கொடுத்தலே பாபம் என்பர். தகுதியற்றவனுக்குத் தானம் கொடுப்பவர் வனாந்தரங்களிலே மந்திகளாய் பிறந்து அலைவார்கள் எனச் சீவக சிந்தாமணியில் ஒரு கருத்து உண்டு.

அக்கினி காரியம், வேதபாராயணமாதியன இல்லாதாருக்குத் தானம் கொடுப்பவர் நரகத் துன்பத்துக்காளாவர், என்கிறது நாரதபத்தி சூத் திரம். தாம் வருந்தி முயன்று செய்யும் தானம் தர வேண்டிய பலனைத் தராமை மட்டுமன்றித் தமக்கே தீங்கும் விளைப்பதெனின் தானம் கொடுப் போரின் தகுதி விடயத்தில் எவ்வளவு கவனஞ் செலுத்தப்பட வேண்டு மென்பதை உணர்தல் நம் கடன் ஆகிறது.

கொடுக்கப்படும் பொருள் மிகச் சிறியதாயினும் அது தக்கவன் கையில் கொடுக்கப்படுமானால் அது அளவிற் சிறந்த பயனைத் தரும் என்பது தமிழ் நீதி.
- கைப்பொருள்

தான் சிறிதாயினும் தக்கார் கைப் பட்டக்கால் வான் சிறிதாய்ப் போர்த்து விடும்.
- நாலடியார்

ஏழாலை மு. கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவகை வழிபாடு

குரு - லிங்க - சங்கம வழிபாடுகள் சைவ சமயத்தில் சொல்லப்பட்டிருக் கின்றன. பெரிய புராணத்தில் கூறப்பட்ட 63 தனியடியார்களுள் குரு வழி பாடு செய்தவர் பன்னிருவர் - சங்கம வழிபாடு எனப்படும் அடியார் வழி பாடு செய்தவர் பத்தொன்பதுபேர். சிவலிங்க வழிபாடு செய்தவர் முப்பத் திரண்டு பேர்.

குரு வழிபாட்டிலும் பார்க்க அதிகமானவர்கள் அடியார் வழிபாடு செய் திருக்கின்றனர்.

ஒருவருக்குக் குருவாயிருக்கும் ஒருவர் பிறருக்கு அடியவராக இருப்பர். இது மட்டுமன்றி பிள்ளைக் கறி கேட்ட வைரவ அடியார்; உன் மனைவியை எனக்குத் தருக எனக் கேட்டவர். எதிரியாயிருந்த தன் தோற்றத்தை மறைத்து வேடம் போட்டுச் சென்று மெய்ப்பொருள் நாயனாரைக் கொலை செய்தவர், உவர் மண் சுமந்து சென்றபோது மழையால் நனைந்து உவர் மண் உடலில் படிந்த பின் அது காயத் திரு நீற்றுப் பூச்சுப் போல் தெரிய அதை அடியார் வேடம் என்று வணங்கிய சேரமான் பெருமாள் நாயனார் என வரும் பெரிய புராணப் பாத்திரங்கள் அடியார் வணக்கத்தில் கவனிக்க வேண்டிய உண்மையை தெளிவுறுத் துகின்றன.

இக் காலத்தில் சில பெரியார்கள் தம் அன்பர்களை ஒன்று கூட்டி, சிவராத்திரி போன்ற சந்தர்ப்பங்களில் சிவநாமம் சொல்லத் தூண்டுகின்றனர். இவர்களையெல்லாம் சிவனடியார்களாகக் கொண்டு வழிபட வேண்டிய அவசியம் சைவ மக்களுக்கு உண்டு. இப் பெரியார்களின் சில பின்னணி களைக் கருதி இவர்களை வணங்காது விட்டால் அப்படி வணங்காதிருப் பவர் ஆணவத்தின் பிடியில் பூரணமாக அகப்பட்டவர்கள் என மதிக்க வேண்டியவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருலிங்க சங்கம வழிபாடுகளை முன்னிட்டு நம் ஆணவத்தையும் அதைத் தொடர்ந்து தீய கர்ம விளைவு களையும் கெடுக்க முயல்வதே அறிவு பூர்வமான சைவ மக்கள் செயலாக இருக்க வேண்டும்.

"வியவற்க எஞ்ஞான்றும் தன்னை" என்ற திருக்குறட் கருத்தைப் பேணி தன்னிடமுள்ள சில குணங்களைப் பெரிதுபடுத்தாது பிறரிடம் உள்ள குற்றங்களைப் பெரிதுபடுத்தாது பிறர் குணங்களைப் போற்றுவதே உய்யும் வழியாகும். இந்த அடிப்படையிலேயே லிங்க வழிபாடு - குரு-வழிபாடுகளுடன் நிறுத்தாது நம் சைவ சமயம் சங்கம வழிபாட்டை - அடியார் வழிபாட்டை, மிக வற்புறுத்தியிருக்கிறது.



தூய சிந்தனை பிறப்பதற்கு தெய்வ பக்தி வேண்டும்.

தீமை செய்தவருக்கும் நன்மை செய்வது சான்றோர் வழக்கம்.

பிறரிடம் குற்றம் காண்பதால் உன் மன்னம் மாசு அடையும்.

தீய வழியில் சம்பாதித்த செல்வம் எதிர்பாராத வழியில் முடிவுறும்.

இறையருளுக்காகவே ஒருவன் பிரார்த்திக்க வேண்டும்.

அதிகாரிகள் தயவுபெறக் காத்திருப்பதுபோல்
ஆண்டவன் தயவு பெறக் காத்திருக்க வேண்டும்.

கண்ணியமானவன் எப்பொழுதும் நேர்மையாகவே சிந்திப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுக்கக் கற்றுக் கொள்ளுதல்

“சுவாமி ராமா” என்பவர் “இமயத்து மகான்களுடன் என் வாழ்க்கை” என ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். 567 பக்கங்கள் உடைய இப் புத்த கத்தில் “கொடுக்கக் கற்றுக் கொள்ளுதல்” என ஒரு பகுதியுள்ளது. இரண்டரைப் பக்கத்தில் உள்ள இப்பகுதி, தன் தேவையைப் பெரிது படுத்தாமல் தன்னிடம் உள்ளதைத் தேவைப்படுபவர்க்குக் கொடுத்தல் பற்றியும் அப்படிக் கொடுத்தலின் சிறப்புப் பற்றியும் அழகாகத் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இக்காலத்தில் நம்மிடையே வழங்கும் “தனக்கு மிஞ்சித் தானம்” என்ற தொடரின் கருத்தை பரிகசிப்பதாக அப்பகுதியுள்ளது.

ஒரு சாதுவுக்கு இந்நூலாசிரியரின் உணவை வழங்கும்படி அவர் குரு கூறுகின்றார். இந்த உணவு இப்பொழுது எனக்குத் தேவைப்படுகிறது. இதை இப்போது கொடுத்தால் எனக்கு நாளைக்குத்தான் உணவு கிடைக் கும். இப்போதே எனக்குப் பசிக்கிறது எனவே நான் உணவைக் கொடுக்க மாட்டேன் என்றார் இவர். உடனே குரு ஒருவேளை சாப்பிடாவிட்டால் நீ ஒன்றும் இறந்து விடமாட்டாய் நான் அன்பாகக் கூறுவதற்கு உடன்படா விட்டால் நான் உன் குரு என்ற முறையில் உனக்குக் கட்டளை இடுகின் றேன். “உணவைக் கொடு” என்கிறார் குரு.

குருவுக்குக் கீழ்ப்படியும் பழக்கம் உள்ள இவர் உடனே தன் உணவை வந்திருந்த சாதுவுக்கு வழங்கி விடுகின்றார்.

சாது உணவருந்திய பின்தான் இவருக்கு ஓர் உண்மை தெரிகிறது. அந்தச் சாது நான்கு நாட்களாக உணவு கிடைக்காதிருக்கிறார் என்பது.

இவர் கொடுத்த உணவால் பசி தீர்ந்து மகிழ்ந்த அச்சாது “கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை ஆசீர்வதிக்கட்டும்! உன் முன்னே உணவு வரும்வரை நீ ஒரு போதும் பசியை உணரமாட்டாய். இது நான் உனக்குக் கொடுக்கும் ஆசீர்வாதம்" என்று கூறினார்.

இச் சாது நான்கு நாட்களாக உணவின்றி இருக்கிறார் என்பதை இவரைப் பார்த்த உடனேயே உணர்ந்து கொண்ட என் குரு இவரை அழைத்து வந்து என் உணவைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்.

குருவைப் போலப் பக்குவப்படாவிட்டாலும் குரு கூறுவதைச் செய்ய வேண்டுமென்ற பக்குவம் அடை யாதிருந்ததாலும் குரு சொன் னதை மறுத்திருக்கிறேன். பின் குருவின் கட்டளையை மீறமாட்டாமல் உணவைக் கொடுத்திருக்கிறேன். அதற்கு மிக மிக மேலான ஆசீர் வாதத்தைப் பெற்றேன் என்பதை நூல் ஆசிரியர் குறிப்பாக உணர்த்தி யிருக்கிறார்.

இதேபோன்ற ஒரு கருத்து சுவாமி யோகானந்தரின் சுயசரிதையிலும் உண்டு.

யோகானந்தரின் குருவின் இடத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி. அன்று அங்கு சென்றவர்கட்கெல்லாம் உணவு வழங்கப்படுகிறது. குருவும் சீடர்களும் சேர்ந்தே உணவு தயாரித்து வழங்கியிருக்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவின் பின் குருவும் யோகானந்தரும் ஓய்வெடுக்கின்ற னர். அப்போது அத்தினத்தில் கலந்து கொள்ளத் தூர இடத்திலிருந்து புறப்பட்டவர்கள் ரெயிலில் வந்து கொண்டிருப்பதைக் குரு தன் விசேட ஆற்றலால் அறிகிறார். களைத்து ஓய்வு கொள்ளும் சீடனை அழைக்க விரும்பாது குருவே வருகிறவர்களுக்கு உணவு தயாரிக்க முயல்கிறார். களைப்புற்ற சீடரும் களைப்பைப் பொருட்படுத்தாது குருவுக்கு உதவுகின்றார். இரவு 10 மணிக்குப் பிறகு வந்தவர்களுக்கு உணவு வழங்கப்பட்ட பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு யோகானந்தரைப் பார்த்து உன் களைப்பைப் பொருட்படுத்தாமல் உதவி செய்தமையை மதித்து "நீ முன் பின் தெரியாத மக்கள் நடமாட்டம் குறைந்த இடத்துக்குச் செல்ல நேர்ந்தாலும் அங்கு நண்பர்கள் கிடைத்து உதவும் சந்தர்ப்பம் உண்டாகும் படி ஆசீர்வதிக்கின்றேன்" என்று கூறியிருக்கின்றார்.

இந்த இரு செய்திகளிலிருந்தும் தன் வசதிக்கு முதன்மை கொடுக்காது பிறருக்கு உதவுவதன் சிறப்பு வெளிப்படுகின்றது.

தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்தல் குருவையும் பெரியோரையும் மதித்தல் என்னும் நற்பண்புகளால் தெய்வீக உதவியையும் வாழ்த்தையும் பெற்று சிறக்கலாம் என்பது தெளிவாகின்றது.

பொதுவாக இக்காலத்தில் வசதி உள்ளபோது உதவுதல், தேவை ஏற்படும்போது வணங்குதல் என்ற தன்மை காணப்படுகின்றது. இது பெருமையானது அல்ல. நோய் வந்தால் வைத்தியசாலைக்குச் செல்லுதல் துன்பம் வந்தால் ஆலயத்துக்குச் செல்லுதல் என்பன இக்காலத்தில் பெருகியுள்ளன.

எங்களுக்குக் கிடைத்தவற்றுக்கு நன்றி செலுத்தல் - தெய்வீகத்தை அறிய - அனுபவிக்க விரும்பி வழிபாடு செய்தல் என்பது அவசியம். இவ்வி ரண்டுக்கும் வேறாக துன்ப நீக்கத்துக்கு ஆலயம் செல்லுதல் என்றி ருக்க வேண்டும். நித்திய வழிபாடு - நைமித்திய வழிபாடு, காமிக வழிபாடு என மூன்று வகை வழிபாடு நம் சைவ சமய சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இவற்றில் காமிக வழிபாடு மட்டுமே இக்காலத் தவரால் மேற்கொள்ளப்படுகின்றது. நித்திய வழிபாடு, நைமித்திய வழிபாடுகள் இல்லாது செய்யும் காமிகவழிபாடு முழுமையாகப் பயன் தராது. மூவகை வழிபாட்டுடன் முதல் கூறிய இரு தன்மைகளும் எமக்கு அவசியம். இவை இன்றி பெருமை வாய்ந்த சைவசமயம் கூறும் சிறப்புக் களை நாம் அடைய இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் கருத்துக்கள்

சிவஞானத்தைப் பெறுதற்கு முன் நாம் கடவுளையறிய இயலாதாயின் அவரைத் தியானித்தலும் வணங்குதலும் எவ்வாறு இயலும்? தியான வணக்கங்களின்றி முக்தி நிலை கைகூடாதே" என்னில் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபடுதற்காக அநேக மூர்த்தங்களை ஆகமங்களிலே விதித்தருளினார். அவையே சிவாலயங்களிலுள்ள திருவுருவங்கள். அவைகளைக் கண்ணாலே தரிசித்துக் கடவுளாக நினைத்து வணங்கினால் அவரை நேரே வணங்கும் பலனுண்டாகும். அந்தத் திருவுருவங்களைத் தியானித்தல் அவரைத் தியானித்தலாம். கோயிலிற் செய்யப்படும் தொண்டுகள் அவருக்கு நேரே செய்யப்படும் தொண்டுகளாம். இவை களோடு சத்திரூபமாகிய மந்திரங்களை உச்சரித்தலும், தேவார திருவா சகம் முதலிய அருட்பாக்களைப் பாடுதலும் அவரைச் சமீபிக்கச் செய்யும் வழிகள். கோயிலுக்குப் போக இயலாத காலங்களிலே அங்கே யிருக்கும் திருவுருவங்களை மனத்திலே பதித்து வழிபடலாம். யோக நிலையடைந் தவர்கள் கோயில் வழிபாட்டோடு யோக வழி பாடும் செய்வர். கோயில் வழிபாட்டைப் பழிப்போர் சிலர், சிற்சில வடிவங்களாகக் கடவுளை நினைத்து, தாம் வழிபடுகிறதாகக் கூறுவர். அவர்கள் நினைக்கும் உருவங்களும் கடவுள்களுடைய உருவங்களல்லவே. அவைகளிலே சிவபெருமானுடைய திருக்குணங்கள் அமையப் பெறாமையாயி னும் கோயிலிலுள்ள திருவுருவங்களில் அவை அமைந்திருந்தலானும் அவர்களது மனம் போனபடியே எண்ணு முருவங்கள் பெரும் பயனற் றவை.. ஆதலால் கடவுளை நேரேயறியும் சுத்த ஞானிகள் தவிர்ந்த மற்றை யெல்லாரும் பிரதிமை வாயிலாகவே கடவுளை வணங்குகின்றனர்.

*-----------*----------- *----------- *

ஆணவத்தின் குணங்கள் மோகம் மதம் ராகம் விஷாதம் சோஷம் வைசித்திரியம் அரிசம் முதலியன.

மோகம் - நல்லறிவை மயக்குவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் - உலக இன்பங்களை மேலாக மதிக்கச் செய்வது.
ராகம் - உலக இன்பங்களில் ஆசையை உண்டாக்குவது
விஷாதம் - அனுபவித்தவை பின்பு கிடையாதபோது வருந்துவது
சோஷம் - பற்றுள்ளவர்களிலிருந்து நீங்க வேண்டிய காலத்தில் வருந்தி உடம்பை மெலியச் செய்வது
வைசித்திரியம் - ஆன்மா தன்னில் உள்ள குற்றங்களை தன்னுடைய பெருமைகளாக வியப்பது
அரிசம் - உலக இன்பங்களை அனுபவிக்கும்போது தனக்கு ஒரு குறை யுமில்லை என நினைப்பது
இவற்றுள் ராகமாகிய அவாவே உயிர்களை அதிகமாக அலைப்பது , "அவா வெள்ளக் கள்வனேனை" என்று மாணிக்கவாசகப் பெருமானாரும், "அவாவென்பவெல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப்பிறம்பீனும் வித்து" என்று திருவள்ளுவ நாயனாரும் பாடியருளி னார்கள்.

ஆணவம் அணுவாக்குவது, அணு மிகச் சிறிய பொருள் ஆன்மாவின் சர்வஞ்ஞத்துவத்தைத் தடுத்து, அதன் அறிவை அணுவாக்குகிறது.

ஆன்மாக்கள் ஆணவத்தினுடைய வஞ்சனையை உணராமல் ஒவ்வொரு நிமிடமும் அதனுடைய வலையில் சிக்கி வருந்துகின்றன. ஒருவன் கொடிய கொலைத் தொழிலைச் செய்யும்போது அது சரியான செயலென்று நினைத்துச் செய்கின்றான். கைக்கூலி வாங்குகிறவன் தன்னுடைய செயல் மிகச் சாதுரியமான தென்று அந்தத் தீய தொழிலைச் செய்கிறான். புலாலுண்ணல் தீய செயலென்று உணர்ந்தவர்களும் அஃதெப்படியாயினுமாக, நாம் உண்போம் என்னும் படி புலாலில் பேராசையை உண்டாக்குகிறது. இப்படியே தீய செயல்களை நல்லவை போலக் காட்டி தன்னை மறைத்து அடுத்துக் கெடுக்கும் குணமே ஆவணவத்தி லுள்ள பெரும் பொல்லாங்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணிக்கு நிதி வழங்கியோர்

## 2019-09-05 முதல் வரவுகள்

| | |
|---|---|
| ஒரு அன்பர் | 500.00 |
| முத்துலிங்கம் மகள் வதனா - பொன்னாலை | 5000.00 |
| சிவகுருநாதன் குடும்பம் - பொன்னாலை | 200000.00 |
| வரதர் தேன்மொழி - யாழ்ப்பாணம் | 1000.00 |
| தியாகராசா மல்லிகா - பொன்னாலை | 30000.00 |
| ச.நடேசமூர்த்தி - கரணவாய் | 1500.00 |
| சற்குணராசா | 2000.00 |
| ஆ.தயானந்தன் (வட்டுமேற்கு மாவடி) | 2000.00 |
| செல்வநாதன் (லண்டன்) | 2000.00 |
| நடராசலிங்கம் குடும்பம் - தொல்புரம் | 5000.00 |
| ஆ.சர்வேஸ்ரன் (வட்டு மேற்கு) | 1000.00 |
| ஏ.ரூபராஜ் குடும்பம் - பொன்னாலை | 5000.00 |
| சிவஞானம் சுமதி - பொன்னாலை | 60000.00 |
| சு.நந்தன் - பொன்னாலை | 1000.00 |
| நரசிங்கம் இந்திரா - பொன்னாலை | 5000.00 |
| இ.வயித்திலிங்கம் குடும்பம் - பொன்னாலை | 25000.00 |
| கா.சந்திரபாலன் குடும்பம் - பொன்னாலை | 20000.00 |
| ஐங்கரன் (பண்ணாகம்) | 1000.00 |
| சி.அஸ்வின் (பொன்னாலை) | 1000.00 |
| மு.ஜெயந்தன் (சுழிபுரம் மேற்கு) | 3000.00 |
| சு.கணபதிப்பிள்ளை - பொன்னாலை | 5000.00 |
| இலட்சுமிப்பிள்ளை வேவி - பொன்னாலை | 50000.00 |
| சிவசுப்பிரமணியம் - நெல்லியான் | 6000.00 |
| நா. திருக்குமார் - பொன்னாலை | 2000.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வெற்றியர் குடும்பம் - நெல்லியான் | 3000.00 |
| மகாதேவன் லாலா - பொன்னாலை | 5000.00 |
| இ.சந்திகுமார் (கனடா சுழிபுரம்) | 25000.00 |
| ஓர் அன்பர் - பொன்னாலை | 100000.00 |
| தணிகைக்குமரன் சுமிர்தா (நெல்லியான் தொல்புரம்) | 15000.00 |
| தவச்செல்வன் விஜிதா (நெல்லியான் தொல்புரம்) | 5000.00 |
| க.பாலகிருஷ்ணன் குடும்பம் - பொன்னாலை | 55000.00 |
| ஒரு அன்பர் | 2000.00 |
| பொன் முத்துக்குமாரன் குடும்பம் - பொன்னாலை | 4900000.00 |
| சோ.இந்துநேசன் - பொன்னாலை | 50000.00 |
| பொன்.தியாகராசா குடும்பம் - பொன்னாலை | 150000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பணி வேலைக்கான செலவு

| இல | விபரம் | செலவு |
|---|---|---|
| 1 | மூலஸ்தான பண்டிகையின் பூச்சுவேலை முழுமையாக அகற்றப்பட்டு வர்க்கவேலைப்பாடுகளுடன் மீளப்பூசி பொம்மைகள்போடப்பட்டு வர்ணவேலை செய்வதற்கான செலவு | 700,000.00 |
| 2 | எழுந்தருளிசபை பண்டிகைமுழுமையாக அகற்றப்பட்டு புதிதாக மீளவும்கட்டி பூசப்பட்டு பொம்மைகள்போடப்பட்டு வர்ணவேலைசெய்வதற்கான செலவு | 650,000.00 |
| 3 | மூலஸ்தானம், அர்த்தமண்டப சுவர்களுக்கும் மகாமண்டப தரைக்கும் கருங்கல் பதித்து எழுந்தருளி சபை சுவருக்கு மாபிள் பதிக்கப்படுவதற்கான செலவு | 1,100,000.00 |
| 4 | மடப்பள்ளி, களஞ்சிய அறைகள் சுவர்கள் புதிப்பிக்கப்பட்டு கூரை திருத்தப்பட்டு சீலிங் போடப்பட்டு தரைக்கு மாபிள் பதிக்கப்பட்டு புகைப்போக்கி, மேடைகளும், அலுமாரி தட்டுகள் போடப்பட்மைக்கான செலவு | 1,400,000.00 |
| 5 | உள்வீதி நிலம் முழுமையாக கொத்தி அகற்றப்பட்டு பொலித்தீன் விரித்து கொங்கிறீற் போட்டு வெள்ளை வைத்தலுக்கான செலவு | 910,000.00 |
| 6 | கோவில் மற்றும் பூந்தோட்டங்களுக்கான மின்னிணைப்பக்களுக்கான செலவு | 75,000.00 |
| 7 | நீர்த்தாங்கி அமைத்தலும் பைப்லைன் வசதிகள் செய்தமைக்கான செலவு | 65,000.00 |
| 8 | கோபுரத்திற்கு சாரம் கட்டி வர்ணம் பூசுவதற்கான செலவு | 350,000.00 |
| | திருப்பணி வேலைக்கான மொத்த செலவு | **5,250,000.00** |

## கும்பாபிசேக செலவுகள்

| இல | விபரம் | செலவு |
|---|---|---|
| 1 | யாகசாலை பொருட்கள் | 65,000.00 |
| 2 | சந்தைபொருட்கள் | 250,000.00 |
| 3 | யாகசாலை அமைப்பதற்கான கூலி | 15,000.00 |
| 4 | மங்களஇசை | 20,000.00 |
| 5 | அஸ்டபந்தனம் | 36,000.00 |
| 6 | ஒலிபெருக்கி | 3,000.00 |
| 7 | குருதட்சணை | 210,000.00 |
| 8 | கலசதிருத்த வேலை | 55,000.00 |
| 9 | கோபுரத்திற்கு ஏணிப்படி கட்டுவதற்கான செலவுகள் | 15,000.00 |
| 10 | இதரசெலவுகள் | 46,000.00 |
| | கும்பாபிசேக மொத்த செலவு | **715,000.00** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களிப்பு செய்த யாவருக்கும் எம் நன்றிகள்

எமது ஆலய புனரமைப்பிலும் குடமுழுக்கிலும் எமக்குப் பல வழிகளிலும் தமது உழைப்பை நல்கிய,

* முழுமையாக கட்டுமான வேலைகளை நிறைவேற்றிய திரு.கணேச பிள்ளை சாரங்கன் மற்றும் அவரது ஊழியர்களுக்கும்
* தூபிச் சிற்பங்கள் அமைத்துத்தந்த திரு.விஜயன் அவர்களது குழுவினருக்கும்
* ராஜகோபுர வர்ணம் பூசிய திரு.லோகேஸ்வரன் குழுவினருக்கும்
* விழா மலருக்கு ஆசியுரை வழங்கிய பெரியோருக்கும்
* விழா மலருக்கு ஆக்கங்கள் வழங்கிய அபிமானிகளுக்கும்
* இந்நூலின் பிழைகளைத் திருத்தியுதவிய திரு.ரகுநாத முதலியார் அவர்களுக்கும்
* இந்நூலினை செவ்வனே அச்சிட்டுதவிய திருவள்ளுவர் அச்சகத் தாருக்கும்
* கும்பாபிஷேக பிரதமகுரு சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அவர்களுக்கும்
* கும்பாபிஷேகத்தில் உதவிய ஏனைய குருமாருக்கும்
* கும்பாபிஷேக தினத்தில் நாட்டியாஞ்சலி வழங்கிய பொன்னாலை சந்திர பரத கலாலயத்தினருக்கும்
* வாத்தியங்கள் இசைத்தோருக்கும் மற்றும் ஒலிபெருக்கி சேவைக்கும்
* ஆலயச்சூழலில் பெரிதும் ஒத்தாசையாக இருந்த திரு.ஆனந்தன் அவர்களுக்கும்
* ஆலய திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி, பொருளுதவி செய்தவர்களுக்கும்
* இன்னும் இங்கு பெயர் குறிப்பிடத்தவறிய அன்பர்களுக்கும்
* பல வழிகளிலும் உதவிய திரு தா.சிவராசா, திரு க.கோபால் உள்ளிட்ட எமது ஊரவர்களுக்கும்

மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருவருளையும் வேண்டிப் பிராத்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலவர்தூபி குடமுழுக்கு



ராஜகோபுர குடமுழுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருவள்ளுவர் அச்சகம், நல்லூர். 021 222 2181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org